# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

வருடாந்த அறிக்கை

2014

# தலைவர் விடுத்துள்ள செய்தி

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2014ம் ஆண்டுக்கான நிதியியல் மற்றும் நிதிசார் செயற்பாடுகளை எடுத்தியம்பும் வருடாந்த அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்க கிடைத்தமையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நிறுவப்பட்டு 11 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இவ்வருடத்தில் அதன் முதன்மை இலக்கான ,போட்டித் தன்மை நிறைந்த வர்த்தக சமூக அமைப்புக்குள் பாவனையாளரைப் பாதுகாத்தல் மற்றும் அறிவூட்டப்பட்ட வர்த்தகசமூக சூழலொன்றை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளதை எமது செயலாற்றுகை அறிக்கைகள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளன என்பதை நான் பூரணமாக நம்புகின்றேன். அதேபோன்று பாவனையாளர்களிடமிருந்து எமக்கு தொடர்ந்து கிடைத்துவரும் முறைப்பாடுகள் போன்றே ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் விமர்சனங்களும் எமது அந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

தற்போதைய போட்டித் தன்மை நிறைந்த திறந்தபொருளாதார வர்த்தகச் சூழலின் கீழ்,நியாயமற்றவிதத்திலான விலை அதிகரிப்பு, நிபந்தனையுடனான வர்த்தகச் செயற்பாடு,விற்பனவுக் கட்டுப்பாடு மற்றும் நியாயமற்ற வர்த்தக நிபந்தனைகள் போன்ற முறைகேடான வர்த்தகக் கொள்கைகள் ஊடாக பாவனையாளரின் நலன்களை பாதிக்கும் நடவடிக்கைகள் நிகழ்வதானது ஒரு சாதாரணவிடயமாகும். இவ்வாறான சூழலின் பின்னணியில் பாவனையாளரைப் பாதுகாக்கும் நோக்கில் எமது விடயப் பரப்புக்குள் இருந்தவாறு தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு மேலதிகமாக புதிய அத்துடன் விசேடகட்டளைகள் விடுப்பதன் ஊடாக மேற்குறித்தநிலைமைகளில் முன்னேற்றம் காண்பதற்கு முடியுமானஅனைத்து முயற்சிகளையும் நாம் தற்பொழுதுள்ள வர்த்தக சூழலின் கீழ் முன்னெடுத்துள்ளோம். அதன் அடிப்படையில் 4 கட்டளைகள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதுடன் அவற்றினூடாக குறிப்பிடத்தக்க அளவில் வர்த்தக முறைகேடுகளை தடுப்பதற்கான தலையீட்டை அதிகாரசபை மேற்கொண்டது.அதே போன்று நாட்டிலுள்ள இரு முக்கிய ஒழுங்கமைப்பு நிறுவனங்களான சுகாதார அமைச்சுடனும் இலங்கை சுங்கத் திணைகளத்துடனும் இணைந்தவாறு செயல்பட்டு உரியநியமங்களுக்கு அமையாத 72 இறக்குமதிப் பொருட்களை பரிசீலணைக்கு உட்படுத்தி அவைநாட்டிற்குள் எடுத்துவருவதை தடுத்து நிறுத்தியதன் ஊடாக பாவனையாளரைப் பாதுகாக்க முடிந்துள்ளது. அதே போன்று வர்த்தக சந்தை பற்றி அறிவூட்டும் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்திவைத்ததன் மூலம் பாவனையாளரையும் அதே போன்று வர்த்தகர்களையும் அறிவூட்டி,அதனூடாகசந்தைபற்றிய அறிவுள்ள நுகர்வோரையும் வர்த்தகர்களையும் உருவாக்கும் முயற்சியில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது தனது உயர் பங்களிப்பையும் வழங்கியது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயற்பாடுகள் பற்றி நன்கு விளக்கமடைந்துள்ள பாவனையாளர்களிடமிருந்து அதிகாரசபைக்கு வரும் முறைப்பாடுகளுக்கு சிறந்த தீர்வுகளை வழங்குவதற்கு அதிகாரசபைக்கு முடிந்துள்ளதுடன் இவ்வாறு திருப்தியடைந்த பாவனையாளர்கள் அதிகாரசபையை பாராட்டிய வண்ணம் கடிதங்கள் அனுப்பியும் தொலைபேசியூடாகபேசியும் உள்ளார்கள்.

சிலகுறிப்பிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களாக அதிகாரசபை இனங்கண்டுள்ள 15 பொருட்களின் தினசரி சந்தைவிலை பற்றிபரிசீலனை செய்தபிறகு அவற்றின் விலையை குறைப்பதற்கு அல்லது விலை அதிகரித்திருப்பின் உரியபரிசீலனையின் மற்றும் செலவுகள்


தொடர்பான பகுப்பாய்வின் பின்பு ஆகக்குறைந்தவிதத்திலான விலைஅதிகரிப்புக்கு மாத்திரம் அதனை கட்டுப்படுத்தி வைப்பதற்கும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

சந்தை நிலவரத்தை இவ்வாறு ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை சந்தை பற்றிய சட்டதிட்டங்களை பின்பற்றத் தவறும் வர்த்தகர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காகவேண்டி பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபை மூலம் 22,402 திடீர் சோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளமுடிந்ததுடன் அதனூடாக 72 மில்லியன் ரூபா வருமானம் அரசுக்கு கிடைத்தது.

இந்தவித வெற்றியை அடைந்து கொள்வதற்கு பங்களிப்புச் செய்த பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கும் அதேபோன்று சகல அலுவலர்களுக்கும் எனது நன்றியை கூறிவைக்க விரும்புகிறேன்.

அதே போன்று,எமது முடிவுகளை சரியான வழியில் இட்டுச் சென்று. அவற்றை அங்கீகரித்தவாறு செயற்பட்டு,சிறந்த அறிவுறுத்தல்களை வழங்கி, எமதுபணிகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சின் செயலாளருக்கும் அதேபோன்று கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, எமது செயற்பாடுகள் ஊடாக திருப்தியடைந்து பாராட்டு மற்றும் மதிப்பீட்டு கடிதங்களை அனுப்பிவைத்த சகல முறைப்பாட்டாளர்களுக்கும் / பாவனையாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஹசித்த திலஹரட்ன

**தவிசாளர்**

**எமது நோக்கு**

ஒழுக்கப்பண்புள்ள வர்த்தக சூழலின் மத்தியில்நன்கு பாதுகாக்கப்பட்டதோர் பாவனையாளர் சமூகம்.

**பணி**

பாவனையாளரை வலுவூட்டல்,வியாபரத்தை

ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஆரோக்கியமான போட்டித்தன்மையை ஊக்குவித்தல் ஊடாக பாவனையாளர் உரிமைகளையும், விருப்பங்களையும் பாதுகாத்தல்.

# கூட்டாண்மையின் இலக்குகள்

1. வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதன் ஊடாக ஒரு திருப்தியடைந்த பாவனையாளர் சமூகத்தை உருவாக்குதல்.

2. நியாயமற்ற வியாபார முறைகளினால் பாதிக்கப்படும் பாவணையாளர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

3. அறிவூட்டல் மற்றும் விழிப்பூட்டல் ஊடாக பாவணையாளரை வலுவூட்டல்.

4. வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் போட்டித்தன்மைக்கு எதிரான செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்தல்,ஆரோக்கியமான போட்டித்தன்மையை ஊக்குவித்தல்.

5. ஆற்றலை அதிகரிப்பதன் ஊடாக நிறுவனத்தை வளர்ச்சியடையச் செய்தல்.

## கூட்டாண்மைவிழுமியங்கள்

- **நம்பிக்கை**
  செயலாற்றுகை விடயத்தில் நேர்த்தியான தன்மையை பேணிவருவருவதுடன் நம்பகத்தன்மையை உறுதி செய்தல்.

- **நேர்மை மற்றும் விசுவாசம்**
  சகலவிதமான செயற்பாடுகளிலும் உண்மையாகவும், நேர்மையாகவும், நியாயமானதாகவும் செயற்படல்.

- **பொறுப்புக் கூறுதல்**
  செயற்படுத்தும் அனைத்து விடயங்களிலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல் என்பவற்றுடன் பொறுப்பு வாய்ந்ததாக இருத்தல்.

- **குழு உணர்வு**
  அனைத்து ஊழியர்களும் பொதுவான இலக்குகளை அடையும் பொருட்டு, புரிந்துணர்வுடனும், ஒருவரை ஒருவர் மதித்தவாறும், நம்பிக்கைக்குரிய விதத்திலும் அதே போன்று சிறந்த தொடர்பாடல் மற்றும் இணக்கப்பாடு ஊடாக ஒற்றுமையுடன் செயற்படுதல்.

- **கௌரவித்தல்**
  ஊழியர்களின் சிறந்த செயற்பாடுகளை கௌரவித்தல்மற்றும் அவர்களை பாராட்டல்.

- **கடப்பாடு**
  ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் தன்னை அர்ப்பணித்தல்.

- **பதில் கூறல்**
  சேவைகளை வழங்குவதற்காக எப்பொழுதும் தயார் என்ற விருப்ப நிலை.

- **ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கம்**
  அனைத்து விடயங்களிலும் தொடர்ச்சியான வளர்ச்சியை அடையும் பொருட்டு புதுக்கருத்துக்களை உள்வாங்குதல்.

1ம், 2ம் மாடி

சி.டப்ளிவ்.ஈ. செயலகக் கட்டிடம்

இல. 27,வொக்ஷோல் வீதி

கொழும்பு - 02

2016.05.12

கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்


ஐயா

1971ம் ஆண்டின் இலக்கம் 38க் கொண்ட நிதிச்சட்டத்தின் பிரிவு 14 (2) க்கு அமைவாக 2014ம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கை ,ஐந்தொகை, வரவு செலவு அறிக்கை உட்பட கணக்காளர் நாயகத்தின் அறிக்கை என்பனவற்றை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்



ஹஸித்த திலஹரத்ன

**தவிசாளர்**

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## வருடாந்த அறிக்கை - 2014

**உள்ளடக்கம்**


1. எங்களைப் பற்றி

| | |
|---|---|
| 1.1 அறிமுகம் | 8 |
| 1.2 அதிகாரசபையின் யாப்பு | 8-9 |
| 1.3 அதிகாரசபையின் ஆளணி | 10 |
| 1.4 நுகர்வோர் அலுவல்கள் கவுன்சில் | 10 |
| 2. அதிகாரசபையின் நோக்கங்கள் | 11 |
| 3. அதிகாரசபையின் பணிகள் | 12-13 |
| 4. அதிகாரசபையின்Æகவுன்ஸிலின் அடைவுகள் | 13-31 |
| 5. 2014 டிசம்பர் 31ம் திகதிக்குரிய நிதி நிலைமை பற்றிய அறிக்கை | 32 |
| 6. 2014ம் டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரிய நிதிச்செயலாற்று அறிக்கை | 33 |
| 7. 2014 டிசம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்குரிய காசுப்பாய்ச்சல் அறிக்கை | 34-41 |
| 8. 2014 டிசம்பர் 31ல் முடிவடைந்தவருடத்திற்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 42-49 |
| 9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீதான தலைவரின் கூற்று | 50-54 |

## எங்களைப் பற்றி

### 1.1 அறிமுகம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது 2003ம் ஆண்டின் இலக்கம் 9ஐக் கொண்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஊடாக 1979ம் ஆண்டின் இலக்கம் 1ஐக் கொண்ட பாவனையாளர் பாதுகாப்புச்சட்டம், 1987ம் ஆண்டின் இலக்கம் 1ஐக் கொண்ட நியாய வியாபார ஆணைக்குழுச்சட்டம் மற்றும் 1950ம் ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச்சட்டம் என்பவற்றை நீக்கியதன் மூலம் உருவாக்கப்பட்டது.

குறித்த சட்டத்தின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளவாறு, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஒட்டு மொத்த இலக்காக, பொருட்களின் விலைகளையும், சேவைகளின் தரத்தையும் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதன் ஊடாகசீராக்கலுக்கு உற்படுத்தி பாவனையாளரைப் பாதுகாப்பதையும் அதே போன்று வர்த்தகர்களையும், உற்பத்தியாளர்களையும் நியாயமற்ற வர்த்தகச் செயற்பாடுகளிலிருந்தும் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வர்த்தகச ˙செயற்பாடுகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதையும் கொண்டுள்ளது. மேலும் பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் போன்றோர் மத்தியில் முடிந்தளவு போட்டித்தன்மையான விதத்தில் விலைகளை நிர்ணயிப்பதன் ஊடாக ஆரோக்கியமான போட்டித்தன்மையை வர்த்தகர்கள் மத்தியில் உறுதிப்படுத்துவதையும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றுது.

### 1.2 அதிகாரசபையின் யாப்பு

குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அதிகாரசபையானது ஒரு தலைவரையும், குறித்த சட்டத்தில் எடுத்துறைக்கப்பட்டுள்ளவாறான தகுதிகளையும், அனுபவங்களையும் கொண்டதும், அமைச்சரால் நியமிக்கப்படவேண்டியதுமான பத்து பேருக்கு குறையாத ஏனைய அங்கத்தினர்களையும் உள்ளடக்கியிருக்கும்.

## அதிகாரசபையின் அங்கத்தவர்கள் - 2014

2014ம் ஆண்டின் இறுதியின் போது பதவி வகித்த அங்கத்தவர்கள் பின்வருமாறு..

1. திருரூமி மர்ஸூக் - தலைவர்
2. திரு மில்டன் அமரசிங்க - முழு நேர அங்கத்தவர்
3. மேஜர் ஜெனரல் நிமல் ஏ ஜயசுரிய - முழு நேர அங்கத்தவர்
4. திரு சுனில் ஜயவீர - முழு நேர அங்கத்தவர்
5. ஜயந்திபுர விமலவன்ஸ தேரோ - அங்கத்தவர்
6. திரு எம். எச். சரீப் - அங்கத்தவர்
7. மேஜர் ஜெனரல் பி. சந்திரவன்ச - அங்கத்தவர்

8. திரு. பின்சித் அமில பெரேரா - அங்கத்தவர்
9. திருமதி எம்.என்.பி குனரத்ன - அமைச்சின் பிரதிநிதி
10. திரு. கே.டி.டி.கே.டீ. அப்ரு - அங்கத்தவர்
11. திரு ஏ.எம் விஜேரத்ன அதிகாரி - அங்கத்தவர்
12. திரு. எம். ஏ விமலவீர - அங்கத்தவர்
13. திரு. டி.சி க்ரிஸ்டி ஜயசேகர - அங்கத்தவர்
14. திரு வருண அலவ்வ - அங்கத்தவர்
15. திரு.டப்ளிவ்.எ.சி ஹேமகுமார - அங்கத்தவர்
16. திரு.ஜே. எம். ஜயதிலக ஜயசுந்தர - அங்கத்தவர்
17. திரு. ஆர்.பி தென்னகோன் - அங்கத்தவர்
18. திரு.டப்ளிவ் சுதம்மிக வீரமன் - அங்கத்தவர்
19. திரு. சமன் சஞ்சீவ பதிரன - அங்கத்தவர்
20. திரு.டி.ஜி.ஜி தரமவர்தன் - அங்கத்தவர்
21. திருடி.பி ஆனந்த ஜயலால் - அங்கத்தவர்
22. திரு. கே.எ.டி.ஆர்.கிறிஸ்டி - அங்கத்தவர்
23. திரு. ஜி.கே.ஜி.எல்.எல்.எஸ்.பி ஜயவர்தன - அங்கத்தவர்
24. திரு. துஷான் சுஸா - அங்கத்தவர்
25. திரு. மாதவ சஞ்சீவ வத்தேகம - அங்கத்தவர்
26. கலாநிதி லக்ஷிமி சோமதுங்க - அங்கத்தவர்
27. என்.என்.ஏ கருணாவதி - அங்கத்தவர்
28. திரு. எம்.பி.பி. அத்தனாயக - அங்கத்தவர்
29. திரு. டி.எஸ்.பி சேனாரத்ன - திறைசேரியின் பிரதிநிதி
30. திரு. ஜே.எம் மங்கலதிஸ்ஸ - அங்கத்தவர்
31. திரு. இசுறு மலிந்த டிசில்வா - அங்கத்தவர்
32. திரு. ஜயந்த பலவர்தன - அங்கத்தவர்
33. திரு. சுஜீவ லொகுஹேவா - அங்கத்தவர்

### 1.3 அதிகாரசபையின்ஆளணியினர்

திரு. ரூமி மர்சூக் அவர்கள் 2014ம் வருட காலப் பகுதியில் தொடர்ந்தும் கடமையாற்றி வந்தார். அதேவேளை திரு. ஜே.எம்.ஏ டக்லஸ் அவர்கள் (இ.நி.சேவை அதிகாரி- வகுப்பு - 1) அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக 2012 டிசம்பர் 3ம் திகதி பதவியேற்றார்.

**அதிகாரசபையின் பிரிவுத்தலைவர்கள் - 2014**

| பெயர் | பதவி |
|---|---|
| 1. திருமதி. தீப்தி திஸேரா M.PA(PIM- SRIJ)சட்டத்தரணி | பணிப்பாளர் - இணக்கம் மற்றும் அமுலாக்கல் |
| 2. திருமதி. சந்திரிகா திலகரத்ன B.Sc Agri (SP) M.Sc (Mgmt) | பணிப்பாளர் - பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் |
| 3. திருமதி. சாந்தினி திருநீலகாண்டன் (ACEA) | பணிப்பாளர் - போட்டி ஊக்குவிப்பு |
| 4. திரு. டப்ளிவ்.எம் ப்ரியன்தா MPM B.Com (Sp) Hons, AIPFM, DPFM | பணிப்பாளர் - நிதி |
| 5. திரு. சம்பத் அங்குலுகுகஹ B. Com (Sp) Hons, AIPM(SL). Dip in PM | பணிப்பாளர் - மனிதவளம் நிர்வாகம் |

6. திரு. ரொஹான் மீவனகே அவர்கள் குறித்த வருட காலப்பகுதியில் விலையிடல் மற்றும் முகாமைத்துவ பகுதியின் பணிப்பாளராக தொடர்ந்தும் கடமை புரிந்தார்.

7. திருமதி. ரஸீகா சாவித்ரி விஜேசேகர - உள்ளக கணக்காய்வாளர்
   B.Sc Accounting (Sp) Hon USJ, CBA,MAAT

### 1.4 பாவனையாளர் அலுவல்கள் பேரவை

பாவனையாளர் அலுவல்கள் போரவையானது மூன்று விசேட நிபுணர்களை உள்ளடக்கி நிறுவப்பட்டுள்ளதுடன், இவர்கள் வணிகச்சட்டம், வர்த்தக முயற்சிகள், முகாமைத்துவம், வர்த்த்க செயற்பாடுகள், பாவனையாளர் அலுவல்கள் சார்பு விடயங்களில் பரந்த அனுபவத்தை கொண்டவர்களாவர். பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் முன்வைக்கப்படும் அனைத்து கோரிக்கைகளையும் இந்த கவுன்சில் கவனத்தில் எடுத்து அவற்றின் மீது தீர்மானம் எடுத்தல் வேண்டும். மேலும், குறித்த சட்டத்தின் பிரிவு 38ன் கீழ் போட்டித்தன்மைக்கெதிரான நடத்தைகள் பற்றியும், பிரிவு 19ன் கீழ் ஆகக்கூடிய சில்லறை விலையை நிர்ணயித்தல் பற்றியும் 19ம், 20ம் பிரிவுகளின் கீழ் அதிக விலைகளை அறவிடுதல் போன்றவை தொடர்பிலும் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் பொறுப்பையும் இக்கவுன்சில் கொண்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் கவுன்சிலின் அங்கத்தவர்கள் பின்வருமாறு,

திரு. உபாலி சேனாரத்ன(யுயுடு) - தலைவர்

திரு. வசந்த குணவர்தன - அங்கத்தவர்

திரு. சுதத் விஜேவிக்ரம - அங்கத்தவர்

கவுன்சிலின் செயலாளராக திருமதி லேகா ஆரியரத்ன (சட்டத்தரணி) செயற்படுகிறார்.

## 2. அதிகாரசபையின் நோக்கங்கள்

அ. பாவனையாளரின் உயிருக்கோ, உடமைக்கோ ஆபத்தை விளைவிக்க கூடிய பொருட்களை சந்தைப்படுத்துவதிலிருந்து அல்லது சேவைகளை வழங்குவதிலிருந்து பாவனையாளரைப் பாதுகாத்தல்

ஆ. நியாயமற்ற விதத்திலான வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து பாவனையாளரைப் பாதுகாத்தல் மற்றும் பாவனையாளரின் நலன்களுக்கு உரிய கவனம் செலுத்துதல் என்பவற்றை உறுதிப்படுத்துதல்

இ. பாவனையாளர், பாவனைப் பொருட்களையும் அதே போன்று சேவைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொளவதற்கான வசதியை நாடுவதை முடிந்தளவு உறுதிப்படுத்தல்

ஈ. வர்த்தகர்களால் மேற்கொள்ளப்படும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகள், கட்டுப்பாடான வர்த்தக நடவடிக்கைகள் அல்லது வேறு வித சுரண்டல் நடவடிக்கைளிலிருந்து பாவனையாளருக்கு நிவாரணம் பெற்றுக்கொடுத்தல்.

## 3. அதிகாரசபையின் பணிகள்

1. கீழ்வருவனவற்றை கட்டுப்படுத்தல், அல்லது இல்லாதொழித்தல்

அ. வர்த்தக முயற்சியாளர்கள் மத்தியில் காணப்படும் கட்டுப்பாட்டு வர்த்தகஉடன்படிக்கைகள்.

ஆ. விலைகள் தொடர்பில் முயற்சியாளர்களுடன் செய்து கொள்ளும் ஒழுங்கமைப்புகள்.

இ. உள்ளூர்சந்தையில் அல்லது அதன் ஒரு கணிசமான தொகுதியில்பொருளாதார அபிவிருத்திசார் ஆதிக்கம் செலுத்தும் நிலைமை அல்லது உள்நாட்டு வர்த்தகம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பான விடயங்களில்ஆதிக்கம் செலுத்தும் நிலைமை.

ஈ.உள்ளுார் சந்தையை அல்லது சர்வதேச வர்த்தகத்தை அல்லது பொருளாதார அபிவிருத்தியை கடுமையாக பாதிக்கும் விதத்திலான போட்டித்தன்மையை ஏதேனும் விதத்தில் தடுத்தல்.

2. போட்டித்தன்மைக்கு எதிரான நடவடிக்கைகள் அல்லது ஆதிக்கம் செலுத்தும் படியான துஷ்பிரயோகம் என்பவற்றை விசாரணை செய்தல் அல்லது பரிசீலனை செய்தல்

3. பாவனைப் பொருட்களை அல்லது சேவைகளை வழங்கும் நபர்களுக்கிடையில் காத்திரமான போட்டித்தன்மையை பேணி வருதல் மற்றும் ஊக்குவித்தல்.

4. பொருட்களின் அல்லது சேவைகளின் விலைகள், அவற்றின் கிடைக்கப்பெறும் தன்மை, ஒத்த தன்மை உட்பட பொருட்களினÆசேவைகளின் பல்வகைத் தன்மை என்பவை தொடர்பில் பாவனையாளரின், விலைக்கு வாங்குபவர்களின் அல்லது ஏனைய பாவணையாளர்களின் உரிமைகளையும் விருப்பங்களையும் பாதுகாத்து ஊக்கமளித்தல்.

5. கொள்வனவுக்காக கிடைக்கச்செய்யும் பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான விலைகள், தரம், அளவு, சக்தி, மற்றும் தூய்மை போன்றவை தொடர்பில் நுகர்வோரை தொடர்ந்தும் அறிவூட்டுதல்.

6. குறித்த சட்டத்தில் உள்ள ஏதேனும் விடயம் ஒன்று தொடர்பில் விசாரணை மற்றும் பரிசீலனை என்பன மேற்கொள்ளல்.

7. போட்டித்தன்மை காத்திரமானதாக இல்லாத சந்தைகளில் போட்டித்தன்மையுடனான விலையினை பேணிவர ஊக்கமளித்தல்.

8. சந்தை நிலைவரங்கள் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளல், அறிக்கைகளை தயாரித்தல் உட்பட பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.

9. அரசதுறை மற்றும் தனியார் துறை தொடர்பான வினைத்திறன் சார் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

10. பாவனையாளர் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மை போன்ற விடயங்கள் தொடர்பிலான நுகர்வோர் கல்விக்கு ஊக்கமளித்தல்.

11. சந்தை நிலைவரம் மற்றும் பாவனையாளர் தொடர்பான அலுவல்கள் பற்றிய தகவல்களை ஏனைய நிறுவங்களுடன் பகிர்ந்து கொள்வதை ஊக்கமளித்தல்.

12. பாவனையாளர் அமைப்புகளை உருவாக்குவதற்கு ஊக்கமளித்து, உதவி செய்தல்.

13. அதிகாரசபையினால் வழங்கப்படும் ஏதேனும் சேவைகளுக்குரிய கட்டணங்களை அறவிடுதல்.

14. அதிகாரசபைக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு வசதியளுக்கும் பொருட்டு, தேவைப்படும் பட்சத்தில் ஏதேனும் செயற்குழுக்களை நியமித்தல் மற்றும் அதிகார சபையின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும், நோக்கங்களை அடைவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல்.

## 4. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயற்பாடுகள்

நிறுவன ரீதியான கட்டமைப்பின் படி, இவ்வதிகாரசபையானது 6 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் அவை 6 பணிப்பளர்களின் கீழ் இயங்கியும் வருகின்றன.

அத்துடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றும் இயங்கி வருகின்றது. அவை பின்வருமாறு.

1. பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்
2. இணக்கம் மற்றும் அமுலாக்கல்
3. விலையிடல் மற்றும் முகாமைத்துவம்
4. போட்டித்தன்மையை ஊக்குவித்தல்
5. நிதி
6. மனிதவளம் மற்றும் நிர்வாகம்
7. உள்ளக கணக்காய்வு

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2014ம் ஆண்டு கால செயற்பாடுகள் பின்வறுமாறு தரப்பட்டுள்ளன

### 1. ஆபத்தான மற்றும் தரக்குறைவான பொருட்களிலிருந்தும் சேவைகளிலிருந்தும் பாவனையாளரப் பாதுகாத்தல்.

அ. குறித்த சட்டததின் பிரிவு 10 மற்றும் 12ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள்.

**உத்தவரவுஇலக்கம் 49-** மென்பானங்கள், போத்தலில் அடைக்கப்பட்ட நீர்Æபோத்தலில் அடைக்கப்பட்ட ஊற்றுÆகிணற்று நீர், உணவில் சேர்க்கக் கூடிய எண்ணெய் வகைகள், பற்பசைகள், அனைத்து வித சவர்க்காரங்கள், சம்பூ, வர்ணப்பூச்சுக்கள்,மின்சார சுவிச், சொகலட், சேர்கிட் ப்ரேகர்ஸ் போன்றவற்றின் உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், விற்பனையாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் என்போருக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை குறித்த பொருட்கள் மீது பாதுகாப்பு முத்திரையை ஒட்டும்படி உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

**உத்தவரவு இலக்கம் 50-** நிர்மாணத்துறையில் பயன்படுத்தப்படும் வர்ணம் பூச்சுகளின் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த பொருட்கள் அடங்கும் போத்தல்களில், பொதிகளில்அதே போன்று வார்னிஷ் மற்றும் கரைசல் பதார்த்தங்களில் தொகுதி இலக்கம், உற்பத்தி திகதி, காலாவதியாகும் திகதி, அளவு மற்றும் ஆக்ககூடிய சில்லறை விலை என்பன தெளிவாக அச்சிடப்படல் வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**உத்தவரவு இலக்கம் 51-** சகல உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும், விநியோகத்தர்களும், வழங்குனர்களும் அதே போன்று வியாபாரிகளும் தமது களஞ்சியங்களில், பண்டகசாலைகளில் அல்லது வேறு இடங்களில் விற்பனைக்கு பொருத்தமில்லாதÆதகுதியற்றதென இனங்காணப்பட்டுள்ள எதேனும் காலாவதியான பொருட்களை, மீள்- ஏற்றுமதிக்காக/ அழிப்பதற்காக அவற்றின் உற்பத்தி வர்க்கம், வர்த்தகப்பெயர், பாரம்/அளவு மற்றும் தொகுதி இலக்கம் என்பவை உள்ளிட்ட பதிவேடு ஒன்று பேணப்படாமல் களஞ்சியப்படுத்தி வைப்பது கூடாது என உத்தவரவு விடுக்கப்பட்டுள்ளது.

**உத்தவரவு இலக்கம் 52-** சகல உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும், விநியோகத்தர்களும், வழங்குனர்களும் அதே போன்று வியாபாரிகளும் விற்பனைக்கு பொருத்தமில்லாதÆதகுதியற்றதென அல்லது காலாவதியாகியுள்ள பொருளென மக்கள் உட்கொள்வதற்கு பொருத்தமில்லாததென இணங்காணப்பட்டுள்ள ஏதெனும் பொருட்களை, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள, விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ள பொருட்களுடன் வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது எந்த விதத்திலும் ஒன்று சேர்த்து கலந்து வைத்திருப்பது கூடாது என உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

ஆ. குறித்த சட்டத்தின் 20(5)ம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டுள்ள பணிப்புரைகள்...

**பணிப்புரை இல 26 -** இன் படி சில அரிசி வகைகளுக்கு அதிகூடிய சில்லறை விலை விதிக்கப்பட்டது.

**பணிப்புரை இல 27 -** இன் படி கோழி இறைச்சிக்கான அதிகூடிய சில்லறை விலை விதிக்கப்பட்டது.

**பணிப்புரை இல 28 -** இன் படி முழு ஆடைப்பால் மாவின் அதி கூடிய சில்லறை விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் (பணிப்புரை இல 20) இரத்துச்செய்யப்பட்டது.

**பணிப்புரை இல 29 -** இன் படி சில அரிசி வகைகளுக்கான அதிகூடிய சில்லறை விலை தொடர்பான- (பணிப்புரை இல 26) இரத்துச்செய்யப்பட்டது.

**இ. இறக்குமதி செய்யப்பட்ட தரக்குறைவான பொருட்கள் மீதான கண்காணிப்பு**

தரக்குறைவான பொருட்கள் இங்குள்ள பிரவேச மையங்கள் ஊடாக நாட்டுக்குள் வருவதை தடுப்பதற்காக வேண்டி அதிகாரசபை இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்துடனும், இலங்கை சுங்கத்திணைக்களத்துடனும் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறக்குமதிப் பொருட்களை பார்வையிடல் திட்டத்தின் கீழ் குறித்த தரத்திற்கு இசைவுறாததால் மீள் ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும் என இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் சிபாரிசு செய்த 72 சம்பவங்கள் மீது உரிய கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**ஈ.**தேசிய மட்ட செயற்குழுக்கூட்டங்களில் கலந்து கொண்டதன் மூலம் பாவனையாளரைப் பாதுகாக்கும் விதத்திலான கொள்கைகளை அறிமுகம் செய்து வைப்பதிலும் அதே போன்று சட்டவாக்கங்களை உருவாக்குவதற்கும் வேண்டிய பங்களிப்பை செய்துள்ளது..

அதே போன்று, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, சுகாதார அமைச்சு, தொழில்னுட்பம் மற்றும் ஆய்வு விடயங்கள் சார் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, சக்திவலு அமைச்சு, பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய கவுன்சில் போன்றவற்றின் கீழ் இயங்கும் தேசிய மட்ட குழுக்கூட்டங்களில் கலந்து கொண்டு, நுகர்வோரை பாதுகாப்பதற்கான கொள்கைத் திட்டமிடல் மற்றும் சட்டவாக்கம், போன்றவற்றில் தனது உயர் பங்களிப்பையும் செலுத்தியுள்ளது.

**2. நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகள், ஏமாற்றும் செயற்பாடுகள் போன்றவற்றிலிருந்து பாவனையாளரைப் பாதுகாத்தல்.**

அ. வர்த்தக சமூகத்திற்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்

சிவில் சமூகத்தை அணுகி, அவர்கள் மத்தியில் இலகுவில்பாதிப்புக்குள்ளாகும் பிரிவினரை பாதுகாக்கும், தரமுயர்த்தும், வலுவூட்டும் நிகழ்ச்சிகள்என்பவற்றை முன்னெடுப்பதானது, போட்டித்தன்மையை ஊக்கமளிப்பதாக அமைகின்றன.வர்த்தகர்களுக்கான நன்கு திட்டமிடப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறான 407 நிகழ்ச்சிகள் வர்த்தக சமூகத்தினர் மத்தியில் 2014ம் ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

| **மாகாணம்** | **மாவட்டம்** | **வர்த்தகர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்** | |
|---|---|---|---|
| | | **மா.எண்** | **சமூகமளித்தோர்** |
| மத்திய மாகாணம் | கண்டி | 18 | 820 |
| | மாத்தளை | 51 | 1121 |
| | நுவரெலியா | 4 | 190 |
| | | **வர்த்தகர்களுக்கான விழிப்பூட்டல்** | |

| மாகாணம் | மாவட்டம் | நிகழ்ச்சிகள் | |
|---|---|---|---|
| | | மா.எண் | சமூகமளித் தோர் |
| கிழக்குமாகாணம் | அம்பாறை | 13 | 212 |
| | மட்டக்களப்பு | 11 | 208 |
| | திருகோணமலை | 17 | 267 |
| வடமத்தியமாகாணம் | அனுராதபுரம் | 11 | 271 |
| | பொலன்னறுவை | 14 | 385 |
| வடமாகாணம் | யாழ்ப்பாணம் | 7 | 119 |
| | வவூனியா | 19 | 541 |
| வடமேல்மாகாணம் | குருணாகல் | 10 | 368 |
| | புத்தளம் | 4 | 219 |
| சபரகமுவமாகாணம் | கேகாலை | 3 | 106 |
| | இரத்தினபுரி | 16 | 330 |
| தென்மாகாணம் | காலி | 11 | 324 |
| | ஹம்பாந்தோட்டை | 8 | 191 |
| | மாத்தறை | 83 | 3088 |
| ஊவாமாகாணம் | பதுளை | 15 | 639 |
| | மோனராகலை | 4 | 108 |
| மேல் மாகாணம் | கொழும்பு | 48 | 3964 |
| | கம்பஹா | 17 | 907 |
| | களுத்துறை | 23 | 718 |
| **மொத்தம்** | | **407** | **15096** |

**விலைக்கண்காணிப்பு**

ஒரு சமூகத்தின் அல்லது அதன் ஓரபகுதியினருக்கு ஏதேனும் பாவனைப்பொருள் ஒன்றுக்கான அல்லது சேவைஒன்றுக்கான் தேவை உள்ளதென கௌரவ அமைச்சர் கருதும் பட்சத்தில், அவர் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்த பின்னர், குறித்த நோக்கத்திற்கான குறித்த பொருள் அல்லது சேவை பற்றிய பணிப்புரையை வர்த்தமானியில் வெளியிட்டு வைப்பார்.

பிரத்தியேக பாவனைப்பொருட்கள் வரிசையில் எல்.பி கேஸ், கோழி இறைச்சி, கோதுமை மா, வெள்ளைச் சீனி, செத்தல் மிளகாய், பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், பருப்பு, நெத்தலிக் கருவாடு, கடலை பயறு மற்றும் டின்மீன் என்பன அடங்குகின்றன.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மீதான விலைகளை கண்காணிக்கும் பொருட்டு கொழும்பு உட்பட ஏனைய மாவட்டங்களில் கிரமமான முறையில் விலைக்கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான 12 கண்காணிப்பு நடவடிக்கைகள் 2014ம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

உணவுப்பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் மீன் போன்றவற்றின் தினசரி சந்தை விலைகளை அடிப்படையாக வைத்தவண்ணம் விலைப்பகுப்பாய்வு அறிக்கைகளை ஒவ்வொரு நாளும் முன்வைக்கப்படுகின்றன.

**ஆ. சந்தைச் சோதனைகள் மற்றும் விசாரணைகள்**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, விபரச்சீட்டு(டுயடிநட) தொடர்பான அறிவுறுத்தல்களை மீறுதல், குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு மேல் விற்பனை செய்தல், பொருட்களை விற்பனை செய்ய மறுத்தல். பொருட்கள் கையிலிருப்பதை மறுத்தல், பொருட்களை பதுக்கி வைத்தல், அதிகாரசபையின் எழுத்து மூலமான அங்கீகாரத்தை பெறாமல் பொருட்களின் சில்லறை மற்றும் மொத்த விலைகளை அதிகரித்தல், விலைப்பட்டியலை காட்சிக்கு வைக்காதிருத்தல், வாங்கிய பொருட்களுக்கு பற்றுச்சீட்டுக்களை வழங்காதிருத்தல், உற்பத்தியாளர்கள்Æவர்த்தகர்கள் போன்றோரின் ஏமாற்றும் விதத்திலான நடத்தைÆபிழையான பிரதிநிதித்துவம் போன்ற இன்னோரன்ன சட்டமீறல்கள் தொடர்பில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தவறிழைக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் 60ம் பிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நீதவான் மன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படுக்ன்றது.

சந்தை மீதான சுற்றிவளைப்புகள் மற்றும் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் தண்டப்பணம் தொடர்பான அதிகரிப்பின் விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

சந்தைச்சோதனைகள் மற்றும் விதிக்கப்பட்ட தண்டப்பணம் என்பவற்றின் வளர்ச்சி - அட்டவணை 02

| மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (இலக்கு) | சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட தண்டப்பணம் |
|---|---|---|---|
| பிரிவு 10ன் கீழான சந்தை விசாரணைகள் (பிரிவு 10ன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரை மீறல்கள்) | 3,530 | 2,757 | 8,946,590/- |
| பிரிவு 11ன் கீழான சந்தை விசாரணைகள்(சந்தை விலையை விட அதிக விலையில் பொருட்களை விற்றல்) | 2,203 | 1,538 | 5,340,939/- |
| பிரிவு 12ன் கீழான சந்தை விசாரணைகள்(தர விதிகளுக்கு இணங்காமல் செயற்படல்) | 133 | 127 | 523,357 |
| பிரிவு 15ன் கீழான சந்தை விசாரணைகள | 38 | 23 | 93,000 |
| பிரிவு 16ன் கீழான சந்தை விசாரணைகள்(ஏதேனும் பொருட்களை வைத்திருப்பதை மறுத்தல்) | 20 | 30 | 112,000 |
| பிரிவு 17ன் கீழான சந்தை விசாரணைகள (பொருட்களை பதுக்குதல்) | 01 | - | - |
| பிரிவு 18ன் கீழான சந்தை விசாரணைகள்(ஆ.கு.சி.விலையை ஐ விடுதல்) | 89 | 19 | 130,000 |
| பிரிவு 20ன் கீழான சந்தை விசாரணைகள் | 702 | 530 | 1,819,600 |
| பிரிவு 26ன் கீழான சந்தை விசாரணைகள் (விலைப்பட்டியலை காட்சிக்கு வைக்காமை) | 6,711 | 7,310 | 20,390,340 |
| பிரிவு 28ன் கீழான சந்தை விசாரணைகள் (பற்றுச் சீட்டு வழங்காமலிருத்தல்) | **13** | **36** | 39,500 |
| பிரிவு 30ன் கீழான சந்தை விசாரணைகள் (ஏமாற்றும் விதத்திலான நடத்தை) | 3,584 | 3,128 | 13,846,500 |
| பிரிவு 30,31ன் கீழான சந்தை விசாரணைகள்(ஏமாற்றும் படியான பொய்யான)பிரதினிதித்துவம | 2,681 | 1,995 | 9,789,244 |
| பிரிவு 31ன் கீழான சந்தை விசாரணைகள் (பொய்யான பிரதிநிதித்துவம்) | 2,697 | 2,711 | 11,265,800 |
| **மொத்த சுற்றிவளைப்புகள் மற்றும் தண்டப்பணம்** | **22,402** | **20,204** | **72,296,870** |

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் 2014ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகள்**



துணிகளுக்கு பயன்படுத்தப்படும் சாயத்தை மிளகாய் தூளில் கலப்பீடு செய்தல்



சாயம் கலக்கப்பட்ட பருப்புக் குவியல்



Tom Tom Crackerஎனப்பட்ட சிறு பிள்ளைகளுக்கான உணவு - உட்கொள்ள தகுதியற்றவை



ஏமாற்றும் விதத்திலான விபரப்பட்டியலுடன் சிமேந்துகளை பக்கற்றில் அடைத்தல்




உரிய விலை, காலாவதித் திகதி, மற்றும் உற்பத்தி திகதி என்பவற்றை மாற்றித்தயாரிக்கப்படும் டின்மீன்கள் தொகை




உட்கொள்ளப் பொருத்தமில்லாத நெத்தலிக் கருவாடு

**நு. அ. அ. சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றுவளைப்புகள் -2014**




**ப. அ. அ. சபையினால் விதிக்கப்பட்டதண்டப்பணம்**




3. நியாயமற்ற விதத்திலான வியாபார நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குதல்.

**அ. பாவனையாளரின் முறைப்பாடுகளை கையாளுதல்**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 13 மற்றும் 32 என்பவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நுகர்வோரினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் மீது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தலையீட்டை மேற்கொள்கிறது. மேலும் உற்பத்தியாளர்கள் அல்லது வர்த்தகர்கள் மூலம் விற்பனை செய்யப்படும் குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் மீது வழங்கப்பட்டுள்ள உத்தரவாத்திற்கு (ருயசசயவெல) இசைவுறாத பொருட்கள் மீதான முறைப்பாடுகள் தொடர்பில் அதிகார சபையானது விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இலக்கம் 3, 4 என்பவற்றில் 2014ம் வருடத்தில் கையாளப்பட்ட முறைப்பாடுகளின் அதிகரிப்பு நிலைமை

| கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகள் | |
|---|---|
| தபால் மூலம் | 1149 |
| தொலைபேசி ஊடாக | 276 |
| சுற்றிவளைப்புகள் (தலைமை அலுவலகம்- மாவட்ட அலுவலகம்) | 275 |
| ஏனைய நிறுவனங்களுக்கு முன் வைக்கப்பட்டவை | 114 |
| முறையான விசாரணைகளும், சட்ட நடவடிக்கைகளும் | 152 |
| மாவட்ட அலகுகளிடம் முன்வைக்கப்படல் (தனிப்பட்ட நிவாரணம்) | 42 |
| முடிவுற்ற முறைப்பாடுகள் | 677 |
| தள்ளுபடி செய்த முறைப்பாடுகள் | 10 |
| நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் | 510 |

(கடந்த ஆண்டின் முறைப்பாடுகள் உடபட)

| பொதுமக்களின் முறைப்பாடுகள் மீது நடாத்தப்பட்ட விசாரணைகள் | |
|---|---|
| விசாரணைகளின் எண்ணிக்கை | 230 |
| சென்ற வருடம்Æமாதம் முதல் தொடரும் விசாரணைகள் | 88 |
| புதிய விசாரணைகள் | 142 |
| தீர்க்கப்பட்ட விசாரணைகள் | 28 |
| விடுக்கப்பட்ட உத்தரவுகள் | 42 |
| செயற்படுத்தப்பட்ட உத்தரவுகள் | 18 |

(கடந்த ஆண்டின் முறைப்பாடுகள் உட்பட)

திடீர் சோதனைகளை தவிர்த்து மேலதிகமாக 23 நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டதுடன் அதிகார சபை 776,500ரூபா தண்டப்பணமாக பெற்றுக்கொண்டது.

| வகை | 2014 |
|---|---|
| ஊரூநு மூலம் தாக்கல் செய்த வழக்குகள் | 23 |
| நீதிமன்றங்களில் தோன்றுதல் | 523 |
| தண்டப்பணம் (நீதிமன்ற வழக்குகள் மூலம்) | Rs. 776,500.∴- |
| மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணைகள் | 124 |

## 4. பாவனையாளர் கல்வி மற்றும் வலுவூட்டல்.

அ. பாவனையாளர் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்

பாவனையாளர்அலுவல்கள் அதிகார சபையானது, பாவனையாளருக்குள்ள உரிமைகள்,பொறுப்புகள், தற்கால பாவனையாளர் சட்டங்கள், பாவனையாளரின் சிறந்த விழுமியங்கள் மற்றும் வர்த்தக பழக்க வழக்கங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் இலத்திரனியல், மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாகவும், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறை மற்றும் பொருட்காட்சி போன்றவைகள் ஊடாகவும் பொதுமக்களை அறிவூட்டி வருகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக பாவனையாளர் குழுக்களையும், வர்த்தக சமூகத்தையும் இணைத்தவாறு பாவனையாளர் உரிமை தினம் கொண்டாடப்படுகிறது. மேலும் நுகர்வே பாவனையாளருக்குள்ள உரிமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டத்திலுள்ள சட்டப்பிரயாணங்கள் தொடர்பில் நாடலாவிய ரீதியில் அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் நடாத்தி வைக்கப்பட்டன.

**பொதுமக்கள் அறிவூட்டல் நிகழ்ச்சி – 05**

| மாகாணம் | மாவட்டம் | வÆகைள விழிப்பூட்டல | பொÆமக்களை | பாடசாலை விழிப்பூட்டல் | கண்காட்சிகள | ஊடக நிகழ்ச்சி | செயலமர்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | கண்டி | 18 | 12 | 2 | | | |
| | மாத்தளை | 51 | 38 | 10 | | | |
| | நுவரெலியா | 4 | 20 | 9 | | | |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | 13 | 8 | 32 | | | |
| | மட்டக்களப்பு | 11 | 22 | 26 | 1 | | |
| | திருகோணமலை | 17 | 31 | 27 | | 4 | |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 11 | 30 | - | | | |
| | பொலன்னறுவை | 14 | 7 | 5 | | | |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 7 | 5 | 13 | | | |
| | வவூனியா | 19 | 12 | 10 | | | |
| வடமேல் மாகாணம் | குருணாகல் | 10 | 33 | 4 | | | |
| | புத்தளம் | 4 | 30 | 4 | | | |
| சபரகமுவ மாகாணம் | கேகாலை | 3 | 48 | 10 | | | |
| | இரத்தினபுரி | 16 | 14 | 9 | | | |
| தென் மாகாணம் | காலி | 11 | 17 | 8 | | | |
| | ஹம்பாந்தோட்டை | 8 | 10 | | 1 | 10 | |
| | மாத்தறை | 83 | 57 | 14 | 2 | 1 | |
| ஊவா மாகாணம் | பதுளை | 15 | 9 | 5 | | | |
| | மோனராகலை | 4 | 7 | 4 | | | |
| மேல் மாகாணம் | கொழும்பு | 48 | 37 | 18 | 9 | 17 | 13 |
| | கம்பஹா | 17 | 20 | 6 | 3 | | |
| | களுத்துறை | 23 | 10 | 13 | | | 1 |
| **மொத்தம்** | | **407** | **477** | **229** | **16** | **32** | **14** |

**பாவனையாளர் அமைப்புக்களை நிறுவுதல் - அட்டவணை 06**

| மாகாணம் | மாவட்டம் | பாவனையாளர் அமைப்புக்களின் எண்ணிக்கை | | பாடசாலை நுÆவோர் வட்டங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | நிறுவப்பட்டவை | பதியப்பட்டவை | நிறுவப்பட்டவை | பதியப்பட்டவை |
| மத்திய மாகாணம் | கண்டி | | | | |
| | மாத்தளை | 4 | | 1 | |
| | நுவரெலியா | | | | |
| கிழக்கு மாகாணம் | அம்பாறை | | 1 | 4 | 4 |
| | மட்டக்களப்பு | | | | |
| | திருகோணமலை | 15 | 6 | 4 | 1 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | | | | |
| | பொலன்னறுவை | | | | |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | | | | |
| | வவுனியா | 9 | 8 | 7 | 9 |
| வடமேல் மாகாணம் | குருணாகல் | | | | |
| | புத்தளம் | | 1 | | |
| சபரகமுவ மாகாணம் | கேகாலை | | | 2 | 2 |
| | இரத்தினபுரி | | 2 | | 1 |
| தென் மாகாணம் | காலி | 3 | | | |
| | ஹம்பாந்தோட்டை | | | | |
| | மாத்தறை | 13 | 4 | | 1 |
| ஊவா மாகாணம் | பதுளை | | | 3 | |
| | மொனராகலை | | | | |
| மேல் மாகாணம் | கொழும்பு | 3 | 1 | 8 | |
| | கம்பஹா | 1 | 1 | | |
| | களுத்துறை | 1 | | 1 | |
| **வுழவயட** | | **49** | **24** | **30** | **18** |

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் - 2014**



பாவனையாளர் உரிமை தொடர்பான பாடசாலை வர்த்தகமட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சி



பாவனையாளர் சட்டவிதிகள் தொடர்பான மட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சி



ஒரு பொதுச்சந்தையில் நடைபெறும் நடமாடும் விழிப்பூட்டல் நிகழ்ச்சி

5. போட்டித்தன்மைக்கு எதிரான வர்த்தக செயற்பாடுகளிலிருந்து வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல். மற்றும் ஆரோக்கியமான போட்டித்தன்மையை ஊக்குவித்தல்.

**போட்டித்தன்மையை ஊக்குவித்தல்**

2014ம் ஆண்டு காலத்தில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளில் 24 விசாரணைகளை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை நடாத்தியுள்ளதுடன் இவற்றில் 17 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் முடிவுற்று தீர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் 5 விசாரணைகள் போட்டித்தன்மைக்கு எதிரான விடயங்களாக இணங்காணப்பட்டு இறுதித் தீர்ப்புக்காக நுகர்வோர் அலுவல்கள் கவுன்சிலிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

சுத்தமாக்கும் மற்றும் அழுக்கு நீக்கும் உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் உள்ள ஏதேனும் ஆதிக்க நிலமை காரணமாக போட்டித்தன்மைக்கு எதிரான ஏதேனும் நிலைமை இருக்கின்றதா என்பதை கண்டறிவதற்கானதோர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது சந்தையில் அவ்வாறான ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிறுவனங்கள் இருந்த போதும் அவற்றினால் குறித்த போட்டித்தன்மைக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதற்கானஉறுதிப்படுத்தப்பட்ட சான்றுகள் இருக்கவில்லை என கண்டறியப்பட்டது. எவ்வாறாயினும் இங்குவிலை தொடர்பில் போட்டித்தன்மைவிலையற்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

தற்பொழுது பிரச்சினையொன்றாககாணப்படும் சந்தையிலுள்ள அரிசியின் விலைகள் பற்றியும் அதிகார சபையின் கட்டுப்பாட்டு விலைக்கு அவ்விலைகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது பற்றியதுமோர் விசேட ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சந்தையில் வகிக்கும் பங்கை இனங்காணல் மற்றும் புள்ளி விபரங்களின் சேகரிப்பு

விற்பனவுச் சந்தையில் அல்லது அதன் ஒரு கணிசமான பகுதியில் நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகளின் போது அங்கு காணப்படும் ஆதிக்கம் செலுத்தும் தன்மையினால் ஏற்படும் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தும் அல்லது இல்லாதொழிக்கும் பாரிய பொறுப்பினை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைகொண்டுள்ளது. சந்தையில் காணப்படும் இவ்வாறான மேலாதிக்கம் சார் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சந்தையில் வகிக்கும் பங்கினை இணங்கான்பதற்கான புள்ளி விபரத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அவ்வாறான கைத்தொழில் முயற்சிகளினதும் நிறுவனங்களினதும் சந்தைக் கட்டமைப்பை இனங்காணக்கூடிய நிலை ஏற்பட்டது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் சந்தையில் வகிக்கும் பங்கை அறிவதற்காக 35 உற்பத்திப் பொருட்கள் பெயரிடப்பட்டதுடன், 300 நிறுவனங்கள் இதில் உள்ளடங்கியிருந்தன. சந்தைசார் ஆதிக்கத்தை அனுமானிப்பதற்காக ஓரே விதமான சந்தைப்பங்கு தகவுவிதிகள் பிரயோகிக்கக்கபடுகின்றன. போட்டித்தன்மையற்ற பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் சந்தை சார் இணங்காணல் நடவடிக்கைகள் இங்கு அவசியம் தேவைப்படுகின்றன.

## உள்ளுர் கைத்தொழில் முயற்சிகளை பாதுகாத்தல்

இனிப்பு பண்டங்கள் இறக்குமதியாளர்களும், சொகலட், பிஸ்கட்ஸ், கேக் மற்றும் சவர்க்காரம் போன்றவற்றின் உற்பத்தியாளர்களும் தமது பொருட்களுக்கான அதிகூடிய சில்லறை விலை(ஆசீ) பட்டியலை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கின்றனர். சுங்கத்திணைக்களமானது முன்வைக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலையின் (ஆசீ) அடிப்படையிலான செஸ்(ஊநுளுளு)வரியை விதிக்கின்றது. அதேவேளை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, வெளியிடப்பட்ட விலைகளின் அடிப்படையில் சந்தைச் சோதனைகளை மேற்கொண்டு, இவ்வாறான உற்பத்திப் பொருட்களின் உரிய வெளியிடப்பட்ட விலைகள் செயற்படுத்தப்படுகின்றதா என உறுதிப்படுத்தும்.குறித்த காலப்பகுதியில் 350 விண்ணப்பங்கள் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கை சுங்கத்திணைக்களம் மேற்குறித்த இறக்குமதிகள் ஊடாக 457,100,205ரூபாவுக்கான செஸ் (ஊநுளுளு) வரி வருமானம் ஈட்டிக்கொண்டது.

**காத்திரமான தகவல் சேவையினை உறுதிப்படுத்துதல்**

சில்லறை விலை பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு கையடக்கத் தொலைபேசி ஊடாக தெரிவித்தல். (சுருக்க குறியீடு -1977)

குறித்த காலப்பகுதியில் அதிகார சபை அதன் சுருக்க குறியீட்டு இலக்கம் (1977) ஊடாகவும், நடமாடும் சந்தைத் தகவல் முறைமை ஊடாகவும் (கொழும்பு, புறக்கோட்டை,தெமடகொட, நுகேகொட, பொரள்ள, வெள்ளவத்தை) மரக்கறி, பழவகைகள், மற்றும் உணவுப்பொருட்கள் என்பவற்றின் சில்லறை விலைகளை அறிந்து தொலைபேசிப் பரிவர்த்தனை மூலம் இச்சேவையை தொடர்ந்து வழங்கி வந்தது. அதே போன்று பேலியகொடை மீன் சந்தையிலிருந்து மீன் விலைகளை அறிந்து தெரிவித்து வந்துள்ளது. இவ்வாறாக சில்லறை விலைகள் தினமும் இற்றைப்படுத்தப்பட்டு மேலிறக்கம் செய்யப்பட்டது. இதன் மூலம் நுகர்வோரும் அதே போன்று உற்பத்தியாளர்களும் தகவல்களை அறிந்தவண்ணம் செயற்பட்டு சரியான முறையில் கொள்வனவுகளையும், விற்பனவுகளையும் மேற்கொள்கின்றனர்.

விடயம் சார் ஏனைய ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களுடனும் அமைப்புகளுடனும் சிறந்த உறவுகளை பேணி வருதல்.

1. சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வலு அமைச்சு
   - தேசிய ஒருங்கினைப்பு கமிட்டி உறுப்பினர்
   - தேசிய பசுமை வழுங்கள் கொள்கை மற்றும் வழிகாட்டி உறுப்பினர்
   - தேசியஇயக்க கமிட்டி உறுப்பினர் (ளுேஊ)

2. தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சு

   செயற்றிட்ட இயக்க கமிட்டி (ளுநு) குழுசு புஜஊ1919 உறுப்பினர்

3. சுகாதார அமைச்சு

   உணவு ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர்

4. இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம்

   சீமேந்துக்கான தரம் பேணல் தொடர்பான பிரத்தியேக கமிட்டி கூட்டம்

**நியாயமான விலையை உறுதிப்படுத்தல்**

அ. குறிப்பிட்ட சில பொருள்கள் மீது விலைகளை ஒழுங்குபடுத்தல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 18, 19 மற்றும் 20 என்பவற்றின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இணங்காணப்பட்ட சில சந்தைப் பொருட்களின் சந்தை விலைகளை நிர்ணயிப்பதில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தலையீட்டை மேற்கொள்கின்றது. தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகளை உறுதிப்படுத்துவதில்Æநிர்ணயிப்பதில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நடவடிகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை - 07** - சில குறிப்பிட்ட பொருட்களுக்கான விலைகளை நிர்ணயிப்பதில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மேற்கொண்ட நடவடிக்கைகள்

| பாவணைப் பொருள் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| சிமேந்து | 1 விண்ணப்பம் தொடர்பான தீர்ப்புÆமுடிவு வெளியிடப்பட்டுள்ளது |
| எல்.பி காஸ் | 2 எல்.பி காஸ் விண்ணப்பங்கள் தொடர்பான தீர்ப்புÆமுடிவு வழங்கப்பட்டுள்ளது |
| முழு ஆடைப்பால் மா | 6 முழு ஆடைப்பால் மா விண்ணப்பங்கள் தொடர்பான தீர்ப்புÆமுடிவு வழங்கப்பட்டுள்ளது |
| மருந்துப்பொருட்கள் | 109 விண்ணப்பங்கள் ஒன்று தொடர்பான தீர்ப்புÆமுடிவு வழங்கப்பட்டுள்ளது |

**இடைக்கால தீர்ப்புகள்**

| இடைக்கால தீர்ப்புகள் | இடைக்கால தீர்ப்பு விண்ணப்பங்களின் எண் |
|---|---|
| குழந்தைப் பால்மா | 01 |
| கோதுமை மா | 01 |
| மருந்துப்பொருட்கள் | 01 |

**1. நிறுவனத்தின் செயற்றிறனை மேம்படுத்தல்**

அ. ஆளணி அபிவிருத்தி

குறித்த துறைகளில் கடமையாற்றும் அலுவலர்களின் விடயம் சார் முன்னேற்றமானது சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கானதோர் முதலீடாகும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கருதுகின்றது. 2014ம் ஆண்டு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அலுவலர் சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை – 08**

2014ல் நடைபெற்ற ஆளணிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள்

| சூ | பாடநெறியின் தலைப்பு | கல.கொண்டோரின் எண் |
|---|---|---|
| 01 | வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்களின் அகற்றல் | 02 |
| 02 | காசு முகாமைத்துவம் மற்றும் காசுப் பாய்ச்சல் கட்டுப்பாடு | 01 |
| 03 | லீவு தொடர்பு பணிகளில் கடமையாற்றும் அலுவலரின் பணிகளும் பொறுப்புக்களும் | 01 |
| 04 | சிறந்த உள்ளக கணக்காய்வு | 01 |
| 05 | சர்வதேச மாநாடு - நவீன தகவல் புள்ளி விபரம் மற்றும் சமூகம் | 01 |
| 06 | கணக்கு புத்தகங்களை முறையாக பேணி வரும் முறைமை | 01 |
| 07 | தேசிய சட்ட மாநாடு - 2014 | 05 |
| 08 | தேசிய முகாமைத்துவ மாநாடு - 2014 | 03 |
| | | |

| சூ | பாடநெறியின் தலைப்பு | கல.கொண்டோரின் எண் |
|---|---|---|
| 09 | நிதியறிக்கை, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிலையான சொத்துக்கள் எனவற்றை சமர்ப்பித்தல் | 03 |
| 10 | அரச முகாமைத்துவ உதவியாளர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் | 03 |
| 11 | அலுவலக உதவியாளர்களினதும், சாரதிகளினதும் திறன் அபிவிருத்தி | 04 |
| 12 | அரச துறை கணக்காளர்களுக்கான முகாமைத்துவ வியூக நிகழ்ச்சிகள் | 01 |
| 13 | தொலைபேசி ஒழுக்க முறை மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் | 1 |
| 14 | நுகர்வோர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான பயிற்சிகள் | 64 |
| 15 | அரச மொழிக்கொள்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி திட்டம் | 67 |
| 16 | போக்குவரத்து முகாமைத்துவம் | 01 |
| 17 | அரச துறை சார்ந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான சிறந்த முகாமைத்துவ திறன்கள் தொடர்பான செயலமர்வு | 01 |
| 18 | உணவுசார் சுகாதாரம் மற்றும் அவற்றின் பாதுகாப்பு மீதான செயலமர்வு | 04 |

ஆ. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஆளணி கட்டமைப்பை பலப்படுத்தல்

| சம்பளக்குறியீடு | பதவி | அனுமதிக்கப்பட்டஆளணி 19.05.2011ம் திகதிக்கு | அனுமதிக்கப்பட்ட தற்போதைய ஆளணி 31.12.2014கு | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| **ர்ஆ 2-1** | **சிரேஷ்ட முகாமையாளர்** | | | |
| | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| **ர்ஆ 1-1** | **பணிப்பாளர்** | 6 | 5 | 1 |
| | கவுன்சில் செயலாளர் | 1 | 1 | 0 |
| **ஆஆ 1-1** | **முகாமையாளர்** | | | |
| | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| | பிரதி பணிப்பாளர் | 15 | 5 | 7 |
| | உதவிப் பணிப்பாளர் | | 3 | |
| | பிரதிÆஉதவிப் பணிப்பாளர் - பிராந்திய | 9 | 8 | 1 |
| **துஆ 1-1** | **கனிஷ்ட முகாமையாளர்** | | | |
| | கணக்காய்வு உத்தியோகத்தர் | 2 | 0 | 2 |
| | முறைமை நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட விசாரணை உத்தியோகத்தர் | 27 | 24 | 3 |
| | சிரேஷ்ட புள்ளி விபர உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட சந்தை வளம் மற்றும் பகுப்பாய்வு அதிகாரி | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட கணக்கு உத்தியோகத்தர் | 2 | 1 | 1 |
| | அந்தரங்க செயலாளர் (னுபு) | 1 | 0 | 1 |
| | அந்தரங்க செயலாளர் (தலைவர்) | 1 | 1 | 0 |

| சம்பளக்கு றியீடு | பதவி | அனுமதிக்கப்பட்டஆளணி 19.05.2011ம் திகதிக்கு | அனுமதிக்கப்பட்ட தற்போதைய ஆளணி 31.12.2014கு | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| | சிரேஷ்ட நிர்வாகÆமனிதவள உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட சட்ட மற்றும் செயற்படுத்தல் உத்தியோகத்தர் | 2 | 2 | 0 |
| | சிரேஷ்ட கிரயஉத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| **ஆயு 5-2** | **செயற்படுத்தல்Æநிறைவேற்றல்Æவிரிவாக்கல்** | | | |
| | தரவு ஒருங்கிணைப்பாளர் | 1 | 1 | 0 |
| | புள்ளி விபர உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| | சந்தைவள பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| | ஆவணவாக்கல் உத்தியோகத்தர் | 6 | 4 | 2 |
| | நூலக பொறுப்பாளர் | 1 | 1 | 0 |
| | கிரயஉத்தியோகத்தர் | 15 | 3 | |
| | கணக்கு உத்தியோகத்தர் | | 9 | 3 |
| | நிர்வாக உத்த்யோகத்தர் | 5 | 3 | 2 |
| | சட்டம் மற்றும் செயற்படுத்தல் உத்தியோகத்தர் | 3 | 2 | 1 |
| | விசாரணை அதிகாரி | 200 | 179 | 21 |
| **ஆயு 2-2** | **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)** | | | |
| | கணக்கு பதிவாளர் | 1 | 0 | 1 |
| **ஆயு 1-2** | **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத)** | | | |
| | முகாமைத்துவ உதவியாளர் | 31 | 31 | 0 |
| °டு 3 | **ஆரம்பமட்ட பயிற்சி பெற்றோர்** | | | |
| | சாரதி | 18 | 17 | 1 |
| °டு 1 | **ஆரம்ப மட்ட பயிற்சி பெறாதோர்** | | | |
| | அலுவலக உதவியாளர் | 14 | 14 | 0 |
| | மொத்தம் | **370** | **318** | **52** |

**இ. ஆளணி ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பு**

குறித்த வருட காலப்பகுதியில் அலுவலர்களின் நலன் கருதி ஒரு சிறந்த வேலை செய்யும் சூழலை உருவாக்கும் நோக்கில் வைத்திய காப்புறுதித் திட்டம், சமய கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள், அலுவலர்களுக்கான ஊக்குவிப்பு திட்டம், அலுவலர் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஊழியர்களை பாராட்டுதல் போன்ற பல்வேறு பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஈ. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.**

இந்த விடயம் தொடர்பில் பிரதி சட்ட வரைஞர் உட்பட சட்ட வரைஞர் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து திருத்தங்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

**பாவனையாளர் அலுவல்கள் கவுன்சில் - 2014**

இக்கவுன்சிலானது, நிர்வாக ரீதியிலான செயற்பாடுகளில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கீழ் இயங்கி வருவதுடன் குறித்த சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு அதிகார சபையினால் முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பில் குறிப்பாக போட்டித்தன்மைக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரித்து தீர்ப்பை வழங்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. அத்துடன் குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இக்கவுன்சில் செயற்பட்டு அதிக விலையிடல், சந்தைசார் குறைபாட்டு நிலைமைகள், சந்தைத் தில்லுமுல்லுகள் தொடர்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும். தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் விற்பனவுÆவழங்கப்பட வேண்டிய அதி உச்ச விலையை சிபாரிசு செய்யும் அதிகாரத்தையும் இச்சபை கொண்டுள்ளது.

**முறைப்பாடுகள்Æ முன்வைப்புகள்**

| ப.அ.அதிகார சபைச்சட்டத்தின் பிரிவு | முறைப்பாடுகள்Æமுன்வைப்புகளின் எண்ணிக்கை | தீர்த்துவைத்தல் தீர்ப்புகள்/பரிந்துறைகள் |
|---|---|---|
| பிரிவு 38 போட்டித்தன்மைக்கு எதிரான செயற்பாடுகள் | 5 | தீர்த்துவைத்தல்-4<br>தீர்ப்புகள்- 2 |
| பிரிவு 19 பொருட்கள் சேவைகள் மீதான உச்சவரம்பு விலையொன்றை சிபார்சு செய்தல் | 2 | பரிந்துரைகள்- 3 |
| பிரிவு 19 மற்றும் 22 பொருட்கள் சேவைகள் தொடர்பான மிதமிஞ்சிய விலைகள் தொடர்பிலான விசாரணைகள | - | பரிந்துரைகள்- 1 |

(கடந்த ஆண்டின் முறைப்பாடுகள் உட்பட)

1977ம் ஆண்டின் செயற்திட்டத்தில் உள்ள விடயங்களை ஒரு முக்கிய பணியாக கருதியவாறு கவுன்சில் செய்ற்பட்டு அவற்றை தினமும் அவதானித்தவண்ணம் இருக்கின்றது.

- விலை இற்றைப்படுத்தலையும், விலைப்பட்டியலையும் பரிசோதித்தல்

- பாவனையாளரின் முறைப்பாடுகள் தொடர்பான சுருக்கமான விபரத்திரட்டை பரிசீலித்தல்

-குறித்த முறைமையானது ஒழுங்காகவும், பாவனையாளர் விரும்பக்கூடியதாகவும் செயற்படுகின்றதா என்பதை அவதானித்தல்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2014.12.31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கை

| | As at 31.12.2014 LKR 000' | As at 31.12.2013 LKR 000' |
|---|---|---|
| **<u>சொத்துக்கள்</u>** | | |
| நடைமுறை சொத்துக்கள் | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 17,593 | 10,775 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவைகள் | 16,124 | 21,724 |
| இருப்புக்கள் | 2,110 | 1,538 |
| எனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள் | 6,138 | 14,759 |
| | 41,966 | 48,795 |
| நடைபெற்று வரும் பணிகள் (அபிவிருத்திக் கட்டம்) | 1,803 | 1,421 |
| **<u>நடைமுறையல்லா சொத்துக்கள்</u>** | | |
| முதலீடுகள் | 168,657 | 145,371 |
| பணிக்கொடை நிதிய முதலீட்டு கணக்கு | 16,682 | - |
| ஏனைய நடைமுறையல்லா நிதிச்சொத்துக்கள் | 8,251 | 8,254 |
| குத்தகைக்கு எடுத்த கட்டிடங்கள் | 900 | 925 |
| உடமைகள், இயந்திரம் உபகரணம் | 55,693 | 57,777 |
| | 250,183 | 212,327 |
| **மொத்த சொத்துக்கள்** | **293,951** | **262,544** |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| நிலுவையில் உள்ள செலவுகள் | 23,038 | 16,025 |
| கொடுக்க வேண்டியவைகள் மற்றும்ஏனைய பொறுப்புக்கள் | 6,096 | 5,435 |
| | 29,134 | 21,461 |
| **<u>நடைமுறையல்லா பொறுப்புக்கள்</u>** | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 26,176 | 21,458 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 55,310 | 42,919 |
| **தேறிய சொத்துக்கள்** | **238,641** | **219,625** |
| **தேறிய சொத்துக்கள்Æஉரிமை நிதி** | | |
| திரண்ட நிதி | 63,191 | 63,191 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 52,535 | 57,517 |
| ஒதுக்கங்கள் | 122,915 | 98,917 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்Æஉரிமை நிதி** | **238,641** | **219,625** |

பக்கம் 05-11 வரையுள்ள கணகீட்டுக் கொள்கைகளும், பக்கம் 12-46 வரையுள்ள சிறு குறிப்புகளும் இங்குள்ள நிதியறிக்கைகளின் முக்கிய பகுதிகளாக அமைகின்றன. இந்த நிதி அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்த பொறுப்பினை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. மேலும் இந்த நிதியறிக்கைகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் சார்பில் நான் இங்கு கையொப்பமிட்டுள்ளேன்

| நிதிப் பணிப்பாளர் | பணிப்பாளர் நாயகம் | தலைவர் |
|---|---|---|
| பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை | பாவனையாளர்அலுவல்கள் அதிகாரசபை | நுகர்வோர்அலுவல்கள்அதிகாரசபை |

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**
**2014.12.31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை**

| | 31.12.2014<br>திகதிக்கு<br>ரூபா 000' | 31.12.2013<br>திகதிக்கு<br>ரூபா 000' |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டுவரும் கொடை | 249,973 | 226,408 |
| தண்டப்பணம் ஊடான வருமானம் | 21,641 | 28,513 |
| ஏனைய வருமானங்கள் | 31,472 | 32,628 |
| | **303,086** | **287,549** |
| **செலவுகள்** | | |
| தனியார் சம்பளம் | (160,896) | (139,879) |
| பிரயாணச் செலவு | (12,496) | (12,172) |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் | (11,130) | (11,417) |
| பராமரிப்பு | (5,401) | (6,674) |
| கொந்தராத்துச் சேவைகள் | (44,905) | (38,691) |
| பெறுமானத்தேய்வு | (17,994) | (17,557) |
| ஏனைய செயற்பாட்டுச்செலவுகள் | (27,617) | (28,087) |
| நிதிச்செலவு | (102) | (107) |
| சொத்துக்கள் விற்பனவில் இருந்து கிடைத்த லாபம் | - | (148) |
| மொத்த செலவுகள் | (280,542) | (254,732) |
| குறித்த வருடத்திற்கான மொத்த தேறிய மிகை.\. (குறைவு) | **22,544** | **32,817** |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
## 2014.12.31ல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் அறிக்கை

| | 2014 LKR 000' | 2013 LKR 000' |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் ஊடான காசுப்பாய்ச்சல்** | | |
| சாதாரண நடவடிக்கைகள் ஊடான மிகை.'.குறைபாடு | **22,544** | **32,965** |
| சொத்துக்கள் விற்பனவு மூலம் கிடைத்த லாபம் .'.நட்டம் | - | (148) |
| **சீராக்கல்கள்** | | |
| பெறுமானத்தேய்வு | 17,994 | 17,556 |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 5,137 | 4,603 |
| தீர்த்தல.'.கழித்தல் | 25 | 25 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முந்திய செயற்பாட்டு லாபம்** | **45,700** | **55,001** |
| கொடுக்கவேண்டியவற்றின் குறைவு | 7,674 | (1,510) |
| ஏனைய நடைமுறைச்சொத்துக்களின் அதிகரிப்பு | 13,648 | (11,831) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (418) | (978) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்** | **66,604** | **40,682** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்** | | |
| இயந்திரங்கள்.'.உபகரணங்கள் கொள்வனவு | (15,911) | (6,223) |
| புலப்படாத சொத்துக்களின் அதிகரிப்பு | (382) | (1,421) |
| இயந்திரங்கள்.'.உபகரணங்கள் விற்பனவு மூலம் கிடைத்தவை | - | 275 |
| பணிக்கொடை நிதியத்தின் முதலீடு | (16,682) | - |
| முதலீடுகளின் அதிகரிப்பு | (23,286) | (20,132) |
| நீண்ட கால கடன்களின் குறைவு | 3 | 185 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | **(56,258)** | **(27,316)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் ஊடான காசுப்பாய்ச்சல்** | | |
| **திறைசேரிக் கொடைகள்** | 12,028 | 4,970 |
| பெறுமானத்தேய்வு -மூலதனம் | 17,010 | 18,740 |
| பிற்போடப்பட்ட வருமானம் | (4,982) | (13,770) |
| நுகர்வோர் பாதுகாப்பு நிதியம் .'.ஒதுக்கங்கள் | 1,454 | 1,314 |
| **நிதியீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(3,528)** | **(12,456)** |
| **காசும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய அதிகரிப்புÆ(குறைவு)** | **6,818** | **910** |
| **குறித்த காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானதும்** | **10,775** | **9,865** |
| **குறித்த காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு சமமானதும்** | **17,593** | **10,775** |

## கணக்கீட்டுக் குறிப்புகள்

### 1. கூட்டாண்மைத் தகவல்

1.1 1979ம் ஆண்டின் இலக்கம் 1ஐக் கொண்ட

பாவனையாளர் பாதுகாப்புச்சட்டம், 1987ம் ஆண்டின் இலக்கம் 1ஐக் கொண்ட நியாய வர்த்தக ஆணைக்குழு மற்றும் கட்டுப்பாட்டு விலைச்சட்டம் (அத்தியாயம் 173) என்பவற்றை நீக்கியவாறு உருவாக்கப்பட்ட 2003ம் ஆண்டின் இலக்கம் 09ஐக் கொண்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச்சட்டத்தின் கீழ் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை நிறுவப்பட்டது.

2011 செப்டம்பர் 15ம் திகதி மற்றும் ீநுனு.ஃ.58.ஃ.02 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி,

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, ஒழுங்குபடுத்தும் முகவர்களின் உபவகைப்படுத்தல் யுயின கீழ்வரும் யு பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.2 முக்கியமான நடவடிக்கைகளும் செயற்பாட்டின் தன்மைகளும்

பாவனையாளரைப் பாதுகாத்த வண்ணம் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதே இவ்வதிகாரசபையின் பிரதான பணியாகும்.

1.3 2014ம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 319 ஆகும்.

1.4 கணிசமான பங்குடமை.ஃ.உரிமை நிதி -

பாவனையாளர அலுவல்கள் அதிகாரசபை பிரதானமாக திறைசேரியால் நிதியை பெறுகின்றது, அதிகாரசபைக்கு நேரடி வருமானமாக கிடைக்கும் தண்டப்பணத்தின் 1.ஃ.3பகுதியைக் கொண்டு உருவாக்கப்படும் நிதியத்தின் தேறிய மீதி அதிகார சபையின் உரிமை நிதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

1.5 அரச கொடைகள்

அரச கொடைகள் கிடைக்குமென நியாயமான உத்தரவாதம் இருக்கும் பட்சத்தில் அவை வருமானமாக கருதப்படுகின்றன. குறித்த கொடையானது ஒரு செலவு விடயமாக இருப்பின் அது குறித்த வருடத்திற்கான வருமானமொன்றாக அடையாளப்படுத்தப்படும். மாறாக, அது ஒரு சொத்துடன் தொடர்புபட்டதாக இருப்பின் குறித்த சொத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் வரை சமமாக பிரிந்து செல்லும் வருமானமாக கருதப்படும்.

பாவனையாளர அலுவல்கள் அதிகாரசபை நிதி சாரா சொத்துக்களை கொடையாக பெறும் பட்சத்தில் குறித்த சொத்தும் கொடையும் பெயரளவில் ஒரு தொகையில் பதிவு செய்யப்பட்டு, அச்சொத்தின் நன்மைகள் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் வரை சமனான வருடாந்த தவணைகளில் லாப நட்டக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும். அரசாங்கம் வழங்கும் சொத்துக்கள் தொடர்புபட்ட கொடைகளும் நியாய விலையிலான நிதி தொடர்பற்ற கொடைகளும் ஐந்தொகையில் பிற்போடப்பட்ட வருமானமாக காட்டப்பட்டுள்ளன.

## 2. பொதுவான கணக்கீட்டுக்கொள்கைகள்

2.1

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதியறிக்கையானது, இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் அரச துறைக்கான கணக்கீட்டு தரக்கமிட்டியினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (ளுடுீளுயுளு) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 நிதியறிக்கைகள், மோட்டார் வாகனங்களைத் தவிர்த்தவாறு, வரலாற்று ரீதியிலான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மோட்டார் வாகனங்கள் நியாயமான பெறுமதியை வைத்து மதிப்பிடப் பட்டுள்ளன.

2.3 தண்டப்பணம் மூலமான வருமானம்

2.3.1 தண்டப்பணம் ஊடாக கிடைக்கும் வருமானம் அதிகாரசபையின் பொது நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாததன் காரணமாக முன்பு அவை நிதிச்செயலாற்று அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என்றாலும், 2011ம் ஆண்டு முதல் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை இதனை திறைசேரியின் அனுமதியுடன் பயன்படுத்தி வருகிறது. எனவே தண்டப்பணம் ஊடான வருமானம் ஒரு வருமானமாகக் கருதப்பட்டு தண்டப்பணத்துடன் தொடர்பு பட்ட வருமானங்களும் செலவுகளும் நிதிச்செயலாற்றுகை அறிக்கையில் காட்டப்படுகின்றன.

2.3.2

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சில சந்தர்ப்பங்களில் பணத்தை தண்டப் பண வருமானமாக பெற்றாலும் திடீர் சோதனைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் வழங்கும் நீதிமன்ற வழக்கு இலக்கத்திற்கும் குறித்த நீதிமன்றங்கள் பணத்துடன் அனுப்பி வைக்கும் வழக்கு இலக்கத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் காரணமாக அப்பணம் வருமானமாகக் கருதப்படுவதில்லை. அது அதிகார சபைக்கு சொந்தமானதா? அல்லது நீதிமன்றங்களால் அவ்வாறு தவறுதலாக அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என கண்டறியும் வகையில் குறித்த பணம் பொதுவாக தொங்கு கணக்கிற்கு தண்டப்பண வருமானமாக மாற்றப்படுகிறது. இவ்வாறான பணம் வருட இறுதி வரை கண்டறியப்படாமல் இருப்பின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் நுகர்வோர் பாதுகாப்பு நிதியத்தில் வரவு வைக்கப்படும்.

2.4 நிதியாண்டு

அதிகாரசபையின் நிதியாண்டானது டிசம்பர் 31ம் திகதியில் முடிவடையும் கலண்டர் வருடமாகும்

## 3. சொத்துக்களின் அடிப்படையும் அவற்றின் மதிப்பீடும்

3.1.1 பாவனையாளர அலுவல்கள் அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கையாக கிரய முறை செயற்படுகின்றது. இதில் மோட்டார் வாகனங்கள் தவிர்க்கப்படும். (SLPSAS)-7

3.1.2 ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கிரய விலையில் குறிப்பிடப்படுவதுடன் இது ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் உதிரிப்பாகங்களின் மீள்பொருத்தப்படுவதை உள்ளடக்கும் திறண்ட பெறுமானத்தேய்வின் தேறிய செலவாகும். ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கணிசமான தொகை மீள் பொருத்தப்படும்போது, நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அவ்வாறு மீள் பொருத்தப்பட்ட பாகங்களை பதிவு நீக்கம் செய்து புதிய பாகங்களை அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் என்பவற்றுடன் பதிவு செய்யும். அதேவேளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச்செலவுகள் என்பன நிதிச்சயலாற்றுகை அறிக்கையில் செலவாக காட்டப்பட்டுள்ளன.

ஏதேனும் மீள் மதிப்பீட்டு மிகைத் தொகை காணப்பட்டால் அத்தொகை சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்களின் திரண்ட பங்குடமையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

3.1.3 ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்என்பவற்றின் செலவுகள் என்னும்போது, குறித்த சொத்துக்களை பயன்படுத்தவுள்ள தேவையின் நிமித்தம் அவற்றை இயங்கச்செய்யும் நிலைக்கு கொண்டுவருவதற்கு செலவாகும் தொகையும், கொள்வனவுச் செலவும் அதே போன்று பொருத்தல் செலவும் உள்ளடங்கும்.

3.1.4 வியாபாரத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் நோக்கில் அல்லது குறித்த சொத்தின் ஆயுட்காலத்தை அதிகரிக்கும் நோக்கில் நிரந்தரத்தன்மையை கொண்ட சொத்துக்களை எடுத்தல், விரிவாக்கம் செய்தல் அல்லது தரத்தினை மேம்படுத்தல் போன்றவை தொடர்பில் ஏற்படும் செலவுகள் மூலதனச்செலவாக கருதப்படுகிறது.

3.1.5 வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 150கு அமைய,2012ம் ஆண்டின் ஆரம்பத்தில்

பாவனையாளர அலுவல்கள் அதிகாரசபையின் வாகன தொகுதிக்கு 5 வாகனங்கள் (4ஹய்யஸ்,மற்றும் 1 டோயோடா மோட்டார் வாகனம்) மேலும் சேர்க்கப்பட்டன. அவற்றின் இன்வொய்ஸ் விலைப்பெறுமதி இலங்கை ரூபா 48,848,357 ஆக இருந்ததுடன் அத்தொகை நிதிசாரா கொடையாக கருதப்பட்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.1.6 முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள் (ரூ1,802,500)

கீழே தரப்பட்டுள்ள தொகை மென்பொருள் அபிவிருத்திக்கும் செயற்படுத்தலுக்கும் செலவிடப்பட்டுள்ளது.

| | **மதிப்பிடப்பட்ட மொத்த செலவு (ரூ)** | **முடிவுற்ற வேலை (ரூ)** | **முடிவுறுத்தப்படவேண்டிய வேலை 31.12.2014ம் திகதிக்கு** |
|---|---|---|---|
| மனித வளப் பொதி | 165,000/- | 121,250/-- | 43,750/-- |
| கணக்கிடல் மற்றும் இருப்பு பொருட்கள் மென்பொருள் | 1,000,000/-- | 200,000/- | 800,000/- |
| மருந்துப் பொருட்கள் மென்பொருள் | 1,975,000/-- | 1,481,250/- | 493,750/- |
| **மொத்தம்** | **3,140,000/-** | **1,802,500/-** | **1,337,500/-** |

3.2 தேய்மானம்

நிறுவனத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து சொத்துக்களும் அவை பாவனைக்கு ஈடுபடுத்தப்பட்ட மாதம் முதல் தேய்மானக் கழிவுக்கு உற்படுத்தப்பட்டுள்ளன.

3.2.1 கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் செலவை தள்ளுபடி செய்வதற்காக தேய்மானம் ஒரு சீரான அடிப்படையில் கீழ்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அலுவலக தளபாடம் மற்றும் பொருத்தப்பட்டவை | 10மூ |
| அலுவலக உபகரணங்கள் | 10மூ |
| கணனி உபகரணங்கள் | 20மூ |
| கணனி மென்பொருள் மற்றும் வெப் டிஸைன்கள் (புலனாகாத சொத்துக்கள்) | 20மூ |
| மோட்டார் வாகனங்கள் | 20மூ |
| அலுவலக பிரிவிடல்கள் | 20மூ |
| நுகர்வுப் பொருள் அல்லாதவை | 10மூ |

3.2.2 தேய்மானக் கணிப்பீட்டின் போது நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை நேர்கோட்டு முறையை பயன்படுத்துகின்றது.

3.2.3 நூலகப்புத்தகங்கள் மீது தேய்மானம் இல்லை.

3.2.4 குறித்த ஆண்டுக்குரிய பெறுமானத்தேய்வின் பெறுமதி பின்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

3.3 கட்டிடங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் குருணாகலை மாவட்ட அலுவலகத்தை நடாத்திச்செல்வதற்காக குருணாகலை அரசாங்க அதிபர் வழங்கியுள்ள கட்டடத்திற்கான கொடுப்பனவான 1 மில்லியன் ரூபா 40 வருடங்களுக்கு மேலாக தேய்விடப்படுகின்றது.

3.4 கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டியவை

கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டியவைகள் அவற்றினால் கிடைக்க வேண்டிய தொகையில்மதிப்பிடப்பட்டுள்ளன.

3.5 இருப்புக்கள்

அவற்றின் கிரய விலையில் அல்லது தேறத்தக்க விலையில் எது குறைந்ததோ அந்த விலையில் கணிப்பீடு செய்யப்படும்.

3.6 காசும் காசுக்கு சமனானதும்

காசும் காசுக்கு சமனானவைகளும் கையிருப்பிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் குறுகிய கால முதலீடுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

3.6.1 காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்கு சமனானவைகளும் கையிருப்பிலுள்ள காசாகவும் வங்கியிலுள்ள வைப்பாகவும் காசாகவும் காட்டப்பட்டுள்ளது.

3.7 நிலையான வைப்புக்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வைப்புக்கள் முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் கடந்த கால அனுபவத்தின் படி நிலையான வைப்பீடுகள் பொதுவாக உரிய காலத்திற்குள் மீளப்பெறாத நிலமை காணப்படுவதுடன்அவை பெரும்பாலும் ஆகக்குறைந்தது 3 வருடங்கள் மீளப்பெறாமல் இருப்பதென அனுமானிக்கப்படுகின்றது. நிலையான வைப்பீடுகள் ஆரம்பத்தில் அதன் கிரய விலையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

**4. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

4.1 செலுத்தவேண்டியவைகள்

அவற்றின் கிரய விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.2 இளைப்பாற்று நன்மைகள் தொடர்பான கடப்பாடுகள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நன்கு வரையறுக்கப்பட்ட நன்மைகளை தரும் இரண்டு இளைப்பாற்று திட்டங்களை கொண்டுள்ளதுடன் இவையிரண்டிற்கும் கொடுப்பனவு பங்களிப்புகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.2.1 வரையறுக்கப்பட்ட நன்மை பயக்கும் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடையானது நன்கு வரையறுக்கப்பட்டதோர் திட்டமாகும். குறித்த சட்டப்பிரமானங்களின் படி அதிகாரசபையானது பணிக்கொடை வழங்கும் கடப்பாட்டில் உள்ளது. இக்கடப்பாட்டை நிறைவேற்றும் விதத்திலான ஏற்பாடுகள் ஐந்தொகையில் முன்கொண்டு செல்லப்படுவதுடன், இத்தொகையானது குறித்த நிதியாண்டின் கடைசி மாதத்தில் சகல ஊழியர்களும் பூர்த்தி செய்த ஒவ்வொரு வருடத்திற்குமான சம்பளத்தின் முழுத்தொகையாகும் என்பதுடன் ஊழியர்களின் முதல் வருட சேவைப்பூர்த்தியில் இருந்து இத்திட்டத்தில் அவர்கள் உள்வாங்கப்படுகிறார்கள். வருட ஆரம்பத்தில் முன்கொண்டு வரப்பட்ட ஏற்பாட்டுத்தொகைக்கும், வருட இறுதியில் பின்கொண்டு செல்லப்பட்ட தொகைக்கும் இடையில் உள்ள வித்தியசத்தொகையானது வருமானக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன் பிரமாணங்களுக்கு அமைவாக ஆகக்குறைந்தது ஒரு வருட சேவையை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் தொடர்பான பணிக்கொடை ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதன்படி, 31.12.2014ம் திகதியில் ஒருவருட சேவையை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களின் திரட்டப்பட்ட ஏற்பாட்டுத்தொகை 26,176,130.00 ரூபாவாக கணக்கிடப்பட்டுள்ளது.

பாவனையாளர அலுவல்கள் அதிகாரசபையானது பணிக்கொடை சார்பான ஒதுக்கங்களை வேறுவேறாக முதலீடு செய்வதற்கு அங்கீகாரத்தை பெற்றுள்ளதுடன் அதன் படி 5 வருடங்களுக்கு மேலாக சேவை புரிந்துள்ள ஊழியர்களுக்கான பணிக்கொடை ஒதுக்கங்களை முதலீட்டில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் அது கீழ்வருமாறு அமைகின்றது

| | |
|---|---|
| 31.12.2014ம் திகதியில் 5 வருட சேவையை பூர்த்தி செய்தவர்கள் தொடர்பான ஒதுக்கங்கள் | 20,970,837.00 |
| 31.12.2014ல் இட்ட முதலீடு | 16,681,743.00 |
| 31.12.2014ல் முதலீடு செய்யப்படவுள்ள மீதித்தொகை | 4,289,094.00 |

திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்ததும் மீதித்தொகை முதலீடு செய்யப்படவுள்ளது

### 4.2.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத்திட்டம் ∴ ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம்

நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கு அமைவாக, சகல ஊழியர்களுக்கும் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நிதியத்திற்கு தகுதியுடையவர்களாவர். ஊழியர் சேமலாப நிதியத்துக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்கப்படும் பணக்கொள்வனவுகள் வருமான அறிக்கையில் செலவொன்றாக காட்டப்பட்டுள்ளன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது ஊழியர்களின் மொத்த சம்பளத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15மூ ஐயும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3மூஐயும் முறையே பங்களிப்பு செய்கின்றது.

## 5. வருமானம்

### வருமான அங்கீகாரம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கவுள்ள அங்கீகாரம் நம்பகத்தன்மை கொண்டதுடன் அதனை மதிப்பிட முடியும்.

மூன்று வருடங்களுக்கு மேலாக குறித்த நாளேடுகளில் காட்டப்பட்டுள்ள கீழ்வரும் கணக்கு மீதிகள் அவற்றுக்குரியவர்கள் எம்முடன் எவ்விதத்திலும் தொடர்பு கொள்ளாததால் வருமானக் கணக்கில் பதியப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வெள்ள நிவாரணம் -கடன் | - (125,00) |
| வரவேண்டிய வருமானம் | - 768,00 |
| விசேட முற்பணம் | - 100,00 |
| மொத்தம் | - 743,00 |

### வட்டி வருமானம்

நிலையான வைப்புக்களினால் கிடைக்கும் வட்டி வருமானம் பெயரளவிலான வட்டி வீதம் (ஜேசு) அடிப்படையில் கணக்கிடப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

**அரச கொடைகள்**

அரச கொடைகள் கிடைக்குமென நியாயமான உத்தரவாதம் இருக்கும் பட்சத்திலும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்திலும் அவை வருமானமாக கருதப்படுகின்றன. குறித்த கொடையானது ஒரு செலவு விடயமாக இருப்பின் (மீண்டுவரும் கொடை) அது குறித்த காலப்பகுதியில் கிடைக்கும் ஒரு வருமானமாக கருதப்படும். மாறாக, அது ஒரு சொத்துடன் தொடர்புபட்டதாக இருப்பின் (மூலதனக் கொடை)அது குறித்த சொத்தின் ஆயுட்காலம் மீது சமமான தொகையில் பின்போடப்பட்ட அத்துடன் விடுவிக்கப்பட்ட வருமானமாகக் கருதப்படும்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நிதி சாரா சொத்துக்களை கொடையாக பெறும் பட்சத்தில் குறித்தசொத்துக்களும் கொடைகளும் பெயரளவிலான தேறிய கணக்குகளில் பதியப்பட்டு, குறித்த சொத்தின் ஆயுட்காலம் பூராவும் வருமானக்கூற்றிற்கு விடுவிக்கப்படும . (ஐயுளு20)

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீசீ/ஈ/சீஏஏ/எப்ஏ/2014  ඔබේ අංකය / உமது இல. / Your No. }  දිනය / திகதி / Date } 2015 ஆகஸ்ட் 24

தலைவர்,

நுகர்வோர் விவகார அதிகாரசபை

**நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34  +94-11-2887223  oaggov@sltnet.lk  www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 02

ஆண்டின் போது காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் காசு உட்பாய்ச்சல் என்பன பிரதிபலிக்கும் முறையின் படி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தயாரிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் மூலதன மானிய காசு உட்பாய்ச்சல் ரூபா 12,027,338 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது பிற்போடப்பட்ட வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்ட காசு அசைவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தாத காலக்கழிவு ரூபா 17,009,798 தொகை காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கவனத்தில் கொண்டு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் பிற்போட்ட வருமானக் கணக்கில் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கிடையே வேறுபாடு காசு வெளிப்பாய்ச்சலாகக் கருதப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 03

முன்னைய காலங்களின் போது ஏற்பட்ட கணக்கீட்டுத் தவறு, பிழை ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீள பிரசுரித்து அவற்றை வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 2,852,501 தொகையான முன்னைய காலப்பகுதியில் ஏற்பட்ட பிழைகளை பிற்போட்ட ரீதியில் சீராக்குவதற்குப் பதிலாக நடப்பாண்டின் மிகைகளில் சீராக்கப்பட்டிருந்தது.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மாவட்ட அலுவலகங்களிலிருந்து அனுப்பட்ட தகவல்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தந்திரோபாய முற்பண மீதி ரூபா 848,736 ஆக இருந்த போதிலும் கணக்கில் அந்த மீதி ரூபா 906,500 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 57,764 இனால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் வேலை நடவடிக்கைகளின் செயற்பாட்டு விளைவு ரூபா 22,544,089 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 32,816,755 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 10,272,666 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தண்டப்பண வருமானம் ரூபா 6,873,226 இனாலும், ஏனைய வருமானம் ரூபா 1,155,326 இனாலும் குறைவடைந்தமை, ஆளணி வேதனங்கள் ரூபா 21,017,070 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சி தொடர்பில் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுகர்வோர் சேவை செயற்திட்டத்திற்காக திறைசேரி அங்கீகாரம் மற்றும் நிதியேற்பாடு கிடைத்த போது, அதற்காக அதிகாரசபையின் நுகர்வோர் பாதுகாப்பு நிதியக் கணக்கிலிருந்து ரூபா 5,401,427 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரச் சட்டத்தில் காண்பிக்கப்பட்ட தகைமை மற்றும் அனுபவம் தொடர்பாக நிபுணத்துவங்களைப் பெற்ற 10 அங்கத்தவர்களுக்கு குறையாத எண்ணிக்கையில் பணிப்பாளர் சபை கொண்டிருக்க வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபைக்கான இருக்கக் கூடிய ஆகக் கூடிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகாரச்சட்டத்தில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிறுவனத்தில் போதியளவான எல்லைகள் கவனத்திற் கொள்ளப்படாது 31 பணிப்பாளர்கள் மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்டிருந்தமையால் பணிப்பாளர் சபை கூட்டப்படிகளுக்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,792,230 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சேவையாற்றிய 31 பணிப்பாளர்களில் 11 பேர் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகைமை மற்றும் அதன் துறைகளில் அனுபவம் மற்றும் தேர்ச்சியைப் பெறாத நபர்களாக இருந்ததுடன் அந்த 2 நபர்கள் அதிகாரசபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மருந்து நிகழ்ச்சித் திட்டத்தின் மருந்து விலை தீர்மானிக்கும் ஆயுட்கால குழுவில் அங்கத்தவராகவும் செயற்பட்டிருந்தார்.

(ஈ) அதிகாரசபையின் தலைவரின் அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்படாத ரூபா 1,628,850 கூட்டுத்தொகையான தளபாடங்கள் அவசரக் கொள்வனவாகக் கருதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) நுகர்வோர் விவகாரம் மற்றும் தகவல் பிரிவின் மூலம் நடாத்தப்பட்ட கண்காட்சிக்கான நடமாடும் கண்காட்சி கூடாரமொன்றை வடிவமைப்பதற்கு கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அதற்காக கம்பனியிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 295,000 ஆகக் குறைந்த விலை கேள்வி மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ளாமல் வேறொரு கம்பனியிலிருந்து அனுப்பப்பட்ட ரூபா 628,447 தொகைக்குரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) அரிசி

அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட அரிசி விலை கட்டுப்பாடு தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாமல் அரிசி உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தமது விருப்பத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அரிசி விலையினைத் தீர்மானித்திருந்தனர். அதிகாரசபையினால் விலைக்கட்டுப்பாட்டு அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் வரையான காலத்தில் 1,329 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதன் மூலம் போதியளவான பிரகாரம் நாட்டில் அரிசியின் விலைக்கட்டுப்பாடு செய்தல் வெற்றி அடைந்திருக்கவில்லை. 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் தொடர்பான அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 19 ஆவது பிரிவின் பிரகாரம் அரிசி விலை அதிகரித்தல் நுகர்வோரினால் கவனத்தில் கொள்ளப்படக்கூடிய முறையில் அச்சுறுத்தலாக இருந்தமையினால் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அதனை புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபைக்கு அனுப்பப்பி அந்த சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அரிசி விலையை அதிகரிப்பதற்காக வர்த்தமானி அறிவித்தலொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சபையின் அங்கீகாரமின்றி வர்த்தமானி அறிவித்தலொன்று வழங்கப்பட்டிருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) குடிநீர் போத்தல்

2012 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையினால் குடிநீர் போத்தல் தொடர்பான ஆய்வொன்றையும் பரிசோதனையொன்றையும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதிகாரசபையினாலும் நுகர்வோர் சபையினாலும் குடி நீர் போத்தல்களின் நியமம் மற்றும் ஆகக் கூடிய விலை தொடர்பாக சட்டங்கள், விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நியமத்திற்குப் புறம்பாகவும் பல்வேறு விலைகளின் கீழ் சந்தையில் குடிநீர் போத்தல் விற்பனை

செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 08 வியாபாரக் குறிகளை உடைய (Brand) குடிநீர் போத்தல் நுகர்வோருக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுவதாக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ரூபா 995,200 பெறுமதியான வீடியோ கெமராவொன்றும் 09 கெமராக்களும் மீளாய்வாண்டின் நவம்பர் முதல் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 25 வரை பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பயன்படுத்தப்படாத 21 நிலையான தொலைபேசிகளுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிலையான கட்டணமாக ரூபா 469,519 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 இணங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரை கட்டிட வாடகையாக ரூபா 1,794,880 கூட்டுத்தொகை கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் பெறுமதிசேர் வரியாக ரூபா 219,693 தொகையும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக ரூபா 35,897 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 மே 15 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் மாதாந்த கட்டிட வாடகைப் பணத்திலிருந்து ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்**

2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2015 மே 29 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) சொத்துக்களின் கொள்வனவு

(ஆ) பொருளிருப்புக் கட்டுப்பாடு

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**<u>பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2014 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிஅறிக்கை தொடர்பாக, 1971ம் ஆண்டின் இல. 38 ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) (இ) வுக்கு அமைவானகண க்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மீது பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபையின் தலைவர் வெளியிட்டுள்ள கருத்து.</u>**

2. நிதிஅறிக்கை

2.1 கருத்து

பாவனையாளர்அலுவலகள் அதிகாரசபையின் 31.12.2014ம் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி அறிக்கையின் படி குறித்த நிறுவனத்தின் நித ிநிலைமை மற்றும் அங்கு 2.2.1 ல் அடங்கியுள்ள விடயங்கள் தவிர ஏனையவை அனைத்தும் இலங்கை அரசகணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக,உண்மையானதும் நியாயமானதுமானதோர் நிலைமையை எடுத்துக்காட்டுவதாக கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார் என்ற விடயத்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**2.2.1 இலங்கை அரசதுறைசார்பான கணக்கீட்டு நியமங்கள்.**

**இலங்கை அரசதுறைசார்பான கணக்கீட்டு நியம இலக்கம். - 02**

1. காசுப் பாய்ச்சல் அறிக்கை தயாரிப்பின் போது, மூலதனப் பாய்ச்சல் தொகையான ரூபா. 12,027,338.00 கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இத்தொகை தனிவிடயமொன்றாககாசுப் பாய்ச்சல் அறிக்கையில் வேறுவேறாக குறிப்பிட்டிருக்கவில்லை என்பதுடன், இக்கணக்குடன் தொடர்புபட்ட இணைக் கணக்கிற்குரிய (சொத்து),கடன் தீர்க்கப்பட்ட ரூபா. 17,009,798.00 ஊடாகவரும் தேறிய பெறுமதியானரூபா. 4,982,458 (17,009,798.00 – 12,027,338.00) வை காசுப்பாய்ச்சல் அறிக்கையிலுள்ள நிதிச் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வரும் நிறுத்திவைக்கப்பட்ட வருமானத்தின் குறைவொன்றாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

   இதன் பின்பு குறித்த விடயங்கள் காசுப் பாய்ச்சல் அறிக்கையில் வேறுவேறாக உள்ளடக்கப்படும்.

2. மேலேயுள்ள 1ல் காணப்படும் விளக்கத்தின்படி குறித்த கடன் தீர்க்கப்பட்ட தொகையான ரூபா. 17,009,798.00 கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக இங்கு தெளிவாகின்றது.

**இலங்கை அரசகணக்கீட்டுத் தர இலக்கம் - 03**

முந்திய வருடத்தில் கணக்கீட்டுத் தவறொன்று இடம் பெற்று இருப்பின்,அதனை நடப்புவருடத்தில் சரி செய்வதை விடுத்து,பிந்திய காலத்துக்கு செல்லுபடியாகும் விதத்தில் சரி செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கும் படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இதன் பின்பு இவ்வாறான கருத்து முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பிருக்காது என பூரணமாக நம்புகிறேன்.

### 2.2.2 இணக்கப்பாடற்ற கட்டுப்பாட்டுக் கணக்கு

பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31ம் திகதியில் கிடைக்க வேண்டிய உபாயத்தூதுவர் சார் முற்பணத் தொகை மீதியாகரூபா. 848,736.00 காணப்பட்டதுடன் அத்தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை கணக்காய்வுக்கும் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 சட்டதிட்டங்கள், நிதிப் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கு முரண்படுதல்.

(அ) பிரிவு 19ஐ ஏற்றுக் கொள்கிறேன். உள்நாட்டு சந்தையில் அரிசி விலை தொடர்பான ஒழுங்கீனம் காணப்பட்ட சந்தர்ப்பத்தில், பொதுமக்களின் நலநன முன்வைத்தவண்ணம் செயற்பட்டு இவ்வாறான அவசரமுடிவினை எடுக்க வேண்டி ஏற்பட்டது.

(ஆ) பிரிவு 19 (2)ம் பிரிவு - இங்கு 1½வருடங்களுக்குப் பதிலாக 8 மாதங்கள் மாத்திரமே தாமதமாகியுள்ளது. எவ்வாறாயினும்,குறித்த பரிந்துரைகள் 30.07.2014ம் திகதியில் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## 3. நிதியியல் மீளாய்வு

### 3.1 நிதியியல் பெறுபேறு

2014ன் நிதிஅறிக்கையின் படிதொழிற்பாட்டுப் பெறுபேறாகரூபா. 22,544,089.00 க்கானமீதித் தொகை காணப்படுகிறது. இத்தொகை முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 10,272,666.00 வினால் குறைந்துள்ளதுடன்,ஊழியர்களின் சம்பளத் தொகையில் எதிர்பார்த்ததைவிடவும் (கொடுப்பனவுரூபா. 3000) அதிகரிப்பு ஏற்பட்டது மாத்திரம் அல்லாமல்,தண்டப் பணம் ஊடானவருமானம் முந்தியவருடத்தைவிடவும் குறைவாக கிடைத்ததுமே இந்நிலைமை ஏற்படக் காரணமாகும்.

## 4. தொழிற்பாட்டுமீளாய்வு

### 4.1 முகாமைத்துவசெயற் திறனின்மை

(அ) பிரிவு 49 (3) இன் படி பாவனையாளர் நிதியத்திலிருந்து பணத்தை செலவு செய்யும் அதிகாரம் பாவனையாளர் அதிகாரசபைக்கே வழங்கப்பட்டுள்ளதுடன்,அதன் படி பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் மாத்திரம் குறித்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிறகு நிதியத்திற்கான இவ்வாறான செலவுகளை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மாத்திரம் அல்லாமல் திறைசேரியின் இணக்கப் பாட்டுடனும் மேற்கொள்ளவுள்ளோம்.

(ஆ) சட்டமாஅதிபர் திணைக்களம், பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபைக்குரிய சட்டத்தை திருத்துவதற்காக அதனை சட்டவரைஞர் பிரிவுக்கு ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளது என்பதுடன்,உத்தேச திருத்தங்களுக்கிடையில் பணிப்பாளர் சபையின் அங்கத்தினர் எண்ணிக்கை 21க்கு மேற்படாதவகையில் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதுடன், இதனூடாக குறித்த சிக்கல் நிலைமையை நிவர்த்தி செய்து கொள்ளமுடியும்.

(இ) இந்நிலைமையினை ஏற்றுக் கொள்வதுடன், இக்கட்டத்தின் போது குறித்த பணிப்பாளர் சபை அங்கத்தினர்கள் தற்போதைய பணிப்பாளர் சபையில் உள்ளடக்கம் பெறவில்லை என்பதுடன்,முன்வரும் காலத்தில் இவ்வாறான குழுக்களின் நியமனங்களின் போது துறைசார் அறிவுள்ள,குறிப்பாக மருந்துவகைகளின் விலைகளை தீர்மானிக்கும் குழுக்களின் நியமனத்தின் போதுகுறித்தமருந்து வகைகள் பற்றி பூரண அறிவுள்ளவர்களையே நியமனம் செய்ய வேண்டும் என்ற தேவையை அமைச்சின் செயலாளர் ஊடாக கௌரவ அமைச்சரை அறியச் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஈ) பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபைத் தலைவரின் அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்கான செலவானது அதிகாரசபையின் ஊடாக இடம்பெறாதகாரணத்தினால் அச்செலவு மதிப்பீடு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும்,குறித்த நவீனமயப்படுத்தலின் போது, அதனோடு தொடர்புபட்ட அலுவலக உபகரணங்கள் விலைக்கு வாங்கவேண்டி ஏற்பட்டதனால்,அவசரத் தேவையொன்றாகக் கருதி, ஏனைய ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தியவாறு,பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மேற்குறித்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(உ) அந்தப் பொருட்களுக்கான விலை கோரல்கள் 17.11.2014ம் திகதியில் முடிவடைந்துள்ளதுடன், ஆகக் குறைந்த விலைகளை சமர்ப்பித்துள்ள நிறுவனத்தின் விலைக்கூறுகள் 19.11.2014ம் திகதியிலேயேநுகர்வோர் அலுவலகள் அதிகாரசபைக்கு கிடைத்துள்ளன. அதேபோன்று,குறித்த நிறுவனம் அவ்வாறு தாமதித்து சமர்ப்பித்த விலைக்கூறுகளுடன்,எமது நிறுவனம் விலைகோரல் தொடர்பாக முன்வைத்த நியமங்கள் மற்றும் கோரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக, இறுதி மதிப்பிடலின் போது இந்த விலைக்கூறுகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

## 4.2 தொழிற்பாட்டு செயற்றிறனின்மை

### (அ) அரிசி

தற்போதைய சந்தை நிலவரத்தின் பின்னணியில் அரிசி விலையை நிர்ணயிப்பதில் பின்வரும் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

1. வரட்சியின் காரணமாக உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது - 2012ம் ஆண்டில் நெல் விளைச்சல் குறைந்ததன் காரணமாக சந்தைக்கான அரிசி வழங்களில் தட்டுப்பாடு ஏற்டபட்டது.

2. நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயித்தல் - அரிசி உற்பத்திக்காகதலா 1.66 கிலோ நெல் தேவைப்படுவதுடன் ஏனைய செலவுகளையும் கவனத்தில் எடுக்கும் போது ஒருகிலோ அரிசியின் உற்பத்திச் செலவு,அதன் கட்டு ப்பாட்டுவிலையை தாண்டிச் செல்வது மாத்திரமல்லாமல்,

3. அரிசியை இறக்குமதி செய்தல் ஊடாக–மேற் குறிப்பிட்ட தேவைப்பாட்டு நிலைமைகளை சமாளிக்கும் பொருட்டு அரசு இதனை இறக்குமதிசெய்கின்றது. இதனால் சந்தைக்கானஅரிசிவழங்களில் அதிகரிப்பு ஏற்பட்டு விலைக் குறைவு ஏற்படுகின்றது எனினும் இந ் நிலைமை ஸ்திரமற்ற தன்மையை கொண்டதுடன் விதித்துள்ள கட்டுப்பாட்டு விலைக்குச் சமமான பெறுமதியில் சந்தையில் விலை தீர்மானிக்கப்படுவதில்லை.

மேற்குறித்த நிலைமையின் பின்னணியில், அரிசி விலையில் தளம்பல் ஏற்படுவதுடன், அரிசி விலைக் கட்டுப்பாடு விதிப்பதும் நடைமுறையில் சாத்தியமற்றதாகின்றது. இந்நிலைமையில், அரிசிவிலை பற்றியவர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் கொண்டுவருவதும் சாத்தியமற்றதாகிவிடுகின்றது. எவ்வாறாயினும் பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபையானது அரிசிவிலை பற்றி தொடர்ச்சியாக பரிசீலனை செய்துவருவதுடன்,தேவையானசந்தர்ப்பத்தில் சந்தையில் திடீர் சோதனைகளை மேற்கொண்டும் வருகின்றது. அதே போன்று அரிசி இறக்குமதஷி மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலை என்பவற்றில் ஸ்திரமானநிலைமையொன்றை நடைமுறையில் அடையும் போது அரிசிக்கான புதியகட்டுப்பாட்டுக்கான விலையை கொண்டுவர அல்லது அவ்வாறு ஏற்படாவிட்டால் குறித்த வர்த்தமான அறிவித்தலை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ)** குடிநீர் போத்தல்:குடிநீரை அடைத்து விற்பதற்கு பயன்படுத்தப்படும் போத்தல்களில் இலங்கைதரநிர்ணய குறியீட்டை கட்டாயப்படுத்தும் படி இலங்கை தரநிர்ணய நிறுவனம் பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததுடன்,அதுதொடர்பான அங்கீகாரத்தினை பணிப்பாளர் சபையிடமிருந்து பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபை பெற்றிருந்த போதிலும் கூட,SLSதொடர்பான கட்டளையொன்றை விடுப்பதற்கு முன்பாக, இதனால் உற்பத்திச் செலவுக்கு ஏற்படும் தாக்கத்தினைகவனத்தில் எடுக்கப்படவேண்டி ஏற்பட்டது.

மேலும்,குறித்த நிறுவனங்களுடன் குறிப்பாக உற்பத்தியாளர்கள் மற்றும் இலங்கை தரநிர்ணயநிறுவனம் போன்றவற்றுடன் கலந்தாலோசித்த வண்ணம் இது பற்றியநிலைமை தொடர்ந்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில், முதல் கட்டமாக குடிநீர்போத்தல்களில் (SLS) குறியீட்டை கட்டாயப்படுத்தும் விதத்திலான வர்த்தமானி அறிவித்தலொன்று 11.06.2015ம் திகதிவெளியிடப்பட்டது.

குறித்த இந்த தரநிர்ணயம் நடைமுறைக்கு வந்த பிறகு அதற்கு ஏற்படும் உற்பத்திச் செலவாகிய நீர் மற்றும் நீரின் தரம் போன்ற வற்றைகவனத்தில் எடுத்த வண்ணம் நீர் போத்தலின் விலையை நிர்ணயிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 4.3 செயற்படாதமற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

வீடியோ புகைப்படக் கருவி :குறித்தநிறுவனங்கள் ஊடாகஉரிய பயிற்சி தற்பொழுது வழங்கப்பட்டுள்ளதுடன்,அவ்வாறு பயிற்சி பெற்ற அலுவலர்கள் தமது கடமையின் போது வீடியோ கமரா மற்றும் ஏனைய கமராக்களை பயன்படுத்துவதற்கு எற்றவாறு அவை குறித்த பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அவை உரிய முறையில் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

### 4.4 பொருளாதாரரீதியில் நன்மையடையாத கொடுக்கல் வாங்கல்கள்

இதுபற்றி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் செயற்குழுக்களுடன் கலந்தாலோசித்த பிறகு குறித்த தொலைபேசிகள் அனைத்தும் செயற்படக்கூடிய நிலைக்கு மாற்றப்பட்டுள்ளன.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

மேற்குறித்த நிலைமையானது, 01.01.2011 முதல் 28.04.2014க்கு இடைபட்ட காலத்தில் காணப்பட்டதாக பரிசீலனையின்போதோ கண்டறியப்பட்டதுடன் அது பற்றி அறியக்கிடைத்ததும் காணியின் குறித்த அளவு உட்பட முழுக் காணித் துண்டையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் பாவனைக்கு எடுக்கத் தொடங்கியுள்ளது. அத்துடன் இவ்வாறு கூடுதலாக செலுத்தியுள்ள பணத்தொகையை ச.தொ.ச நிறுவனத்திடமிருந்து மீளப்பெறுவதற்கானநடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

**5. பொறுப்புக் கூறல் மற்றும் நல்லாட்சி**

**5.1 வருடாந்த அறிக்கையினை சபையில் சமர்ப்பித்தல்.**

2012ம் வருடத்துக்குரிய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் 2013 ஐ அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

**6. கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாடு**

(அ) சொத்துக்களை கொள்வனவு செய்தல்.

(ஆ) பொருள் மதிப்பீடு.

(இ) கணக்கிடல்

ஹசித்த திலஹரட்ன
**தவிசாளர்**